

ஐயாசாமி
கோ.மோகனரங்கன்
பதிப்பகம்
சசி



சிறுவர் கதை

புலவர்
ஆலந்தூர் கோ. மோகனரங்கன், பி.லிட்.

வசந்தா பதிப்பகம்
21, தருமராசா கோயில் தெரு,
ஆலந்தூர், சென்னை - 600 016.

முதற் பதிப்பு : ஜூலை, 1975.
இரண்டாம் பதிப்பு : மார்ச்சு, 1983
உரிமை : ஆசிரியர்க்கு.

விலை ரூ 3-25

ஆசிரியரின் பிற நூல்கள்

சிங்காரப் பேட்டையில் பங்காரு தாத்தா	4	50
கோணமலை கோவிந்தன் கொக்கு பிடித்த கதை	5	00
கல்வி உன்னைக் காப்பாற்றும்	5	00
கள்ளனுக்குப் பாதி குள்ளனுக்குப் பாதி	5	00
அறம் வளர்ப்போம் வாருங்கள்	4	00
அறிஞர் ஆவோம் வாருங்கள்	4	00
ஏமாந்தவர் யார்?	4	50
வணக்கம் செய்த வளையாபதி	5	25
அன்பு செய்வதே அழகு	6	50
ஒழுக்கம் எங்கள் உயிர்	3	50

அச்சிட்டோர் :
வெற்றி அச்சகம்,
சென்னை – 600 005.

ஐயாசாமியின் அழைப்பு

உங்களுக்காக ஐயாசாமி கொய்யாத் தோப்பிலே காத்துக் கொண்டிருக்கிருன். இதுவே அவனுடைய அழைப்பு. அவனைச் சந்திப் பதற்கு நீங்கள் ஆவலோடு வந்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. இப்போதே அவனிடம் நான் உங்களை அழைத்துப் போகிறேன்!

இன்று இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளி வருகிறது. அச்சிட்டு வழங்கிய வெற்றி அச்சகத்தினருக்கும் ஓவியர் திரு. சசி அவர்களுக் கும் என் மனமார்ந்த நன்றி. என் நூல்களை வாங்கி ஆதரிக்கும் அன்பு உள்ளங்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

அன்பார்ந்த,

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்



அந்த அழகான ஊருக்குப் பெயர் கிளியனூர். அங்கே பசுங்கிளிகள் கொஞ்ச மறந்தாலும் பசுமை கொஞ்ச மறப்பதில்லை. சின்னஞ் சிறிய ஊர். ஊர் சிறிதாக இருந்தாலும் ஐயாசாமி ஊரில் பெற்ற பெயர் பெரிதாக இருந்தது.

ஊரின் தெற்கே ஒரு கொய்யாத் தோப்பு. அதில் நடப்பது ஐயாசாமியின் ஆட்சி. கொய்யாத் தோப்புக்கு அப்பால் ஒரு குளம் இருந்தது. மாடுகளைக் கழுவ அங்கே குப்பன் வருவது வழக்கம்.

ஐயாசாமிக்கு வயது பத்து. இவனைவிட மூன்றாண்டு பெரியவன் குப்பன். தனக்குச் சின்னவனாக இருந்தாலும் ஐயாசாமி சொல்வதைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடுவான் குப்பன்.

வருவோர் போவோர் நடமாட்டம் எல்லாம் வடக்குப் பக்கத்தில். ஊரின் தென்கோடியில் உள்ள கொய்யாத் தோப்பு அமைதியாக இருக்கும். ஐயாசாமி தன் நண்பர்களின் துணையோடு 'ராஜசபை'யைத் தொடங்கிவிட்டால் அமைதி அலறிக்கொண்டு ஓடும்.

குப்பன் ஐயாசாமியைத் தேடி வந்தான். கொய்யாத் தோப்பைச் சுற்றிப் பார்த்தான். ஐயாசாமி எங்கே இருக்

கிருன் என்று அவனுக்குத் தெரியவில்லை. எந்த மரத்தில் எந்தக் கிளையில் இருக்கிருன் என்று எளிதில் எவரும் கண்டுபிடித்துவிட முடியாது!

தன் நண்பர்கள் நன்ருக ஏமாந்த பிறகு, எதிர்பாராத சமயம் பார்த்துத் தோன்றுவான். அவர்கள் திகைப்பார்கள்! இவன் சிரிப்பான்! ஐயாசாமி தோப்பில் இல்லையே என்று எண்ணிக் கொண்டே குப்பன் வெளியே போகத் திரும்பினுன்.

பின்னுல் வந்து கண்களைப் பொத்தினுன் ஐயாசாமி. புரிந்து கொண்டான் குப்பன். "கையை எடுடா! இன்று ஞாயிற்றுக்கிழமை மறந்து விட்டாயா?"

"நான் மறந்தாலும் நீ மறக்க விடுவாயா?" என்று கூறிய ஐயாசாமி குப்பனேடு சேர்ந்து நடந்தான். இருவரும் சந்தைக்குப் புறப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமை தோறும் பக்கத்து ஊரில் சந்தை நடக்கும்.

சந்தையைச் சுற்றுவதில் ஐயாசாமிக்கு மகிழ்ச்சி. ஐயாசாமியைச் சுற்றுவதில் அவன் நண்பர்களுக்கு மகிழ்ச்சி. வழியில் சொக்கன் வந்தான். "ஏன்டா, நானில்லாமல் புறப்பட்டு விட்டீர்களோ?"

"நீ வரும் வரை காத்திருந்தால், அடுத்த வாரச் சந்தைக்குத் தான்டா போக முடியும்!" என்று கூறிக் கொண்டே வேகமாக நடந்தான் ஐயாசாமி, பின்னுல் தங்கம் கத்திக் கொண்டே ஓடி வந்தான்.

"ஐயாசாமி ஐயாசாமி". ஐயாசாமி திரும்பிப் பார்த்தான். தங்கம் ஓடி வருவது தெரிந்தது. மூவரும் சிறிது நின்றனர். தங்கம் வந்து சேர்ந்ததும் நடக்கத் தொடங்கினர்.

சந்தையை அடைந்து விட்டனர். பலவகைப் பொருள்கள் அங்கே விற்கப்பட்டுக் கொண்டிருந்தன. வாங்குவோரின் கூச்சலும் விற்போரின் கூச்சலும் ஐயா சாமிக்கும் அவன் நண்பர்களுக்கும் மிகுந்த உற்சாகத்தைத் தந்தன.

இவர்கள் போடுகிற கூச்சலுக்குத் தடை இருக்காதல்லவா ? பழந்துணிகளைக் குவித்து வைத்துக் கொண்டு ஒருவன் விற்பனை செய்து கொண்டிருந்தான். அவனைப் பலர் சூழ்ந்து கொண்டிருந்தனர். ஒரு கிழவர் மஞ்சள் சட்டையை எடுத்தார். விற்பவனை விலை கேட்டார்.

விற்பவன், வேட்டி வாங்கிய ஒருவனுடன் விலை பேசிக் கொண்டிருந்தான். கிழவருக்குக் கோபம் வந்தது. "எத்தனை முறை விலை கேட்பது ? உன் காதில் விழவில்லையா ?"

"சட்டை ஐந்து ரூபாய், ஏன் அவசரப்படுகிறீர்கள்?" என்று கூறிவிட்டு வேறு ஒருவருடன் பேசத் தொடங்கி விட்டான். கிழவரின் பக்கத்தில் ஐயாசாமி நின்றான். விலை அதிகம் என்று எண்ணிய கிழவர் வாங்கத் தயங்கினர். அவர் கையிலிருந்த சட்டையை மெதுவாகத் தான் வாங்கிக் கொண்டான் ஐயாசாமி.

கிழவர் வேறு துணிகளை எடுத்துப் பார்த்தார். தனக்குப் பிடித்த துணி ஒன்றுக்கு விலை கேட்டார். "முன்னால் எடுத்த சட்டை எங்கே?" என்று விற்பவன் கேட்டான். பக்கத்தில் நின்ற ஐயாசாமியிடம் கொடுத்தது கிழவருக்கு நினைவு வரவில்லை.

"இங்கேதான் இருக்கும்! பார்!" என்றார். துணிகளைப் புரட்டிப் பார்த்தான். காணவில்லை. அவனுக்குப்

பக்கத்தில் நின்ற ஒருவன், "உன் முதுகுக்குப் பின்னால் ஒரு சட்டை இருக்கிறது ! பார் !" என்றான். விற்பவன் திரும்பிப் பார்த்தான். அதே சட்டை !

"ஏ கிழவா! சட்டையை என்பின்னால் வைத்துவிட்டு என்னைத் தேடும்படிச் செய்துவிட்டாயே ! வயதாகியும் உனக்கு இன்னும் குறும்பு போகவில்லை" என்றான். எல்லோரும் சிரித்துவிட்டனர். கிழவரின் முகம் சுருங்கி விட்டது ! "நானா குறும்பு செய்தேன்?" என்று அவனை முறைத்தார்.

குறும்பு செய்த ஐயாசாமி சிரித்தபடி அங்கிருந்து வெளியேறினான். அவன் நண்பர்களும் சிரித்துக் கொண்டே அவனைத் தொடர்ந்தனர். ஒரு மிட்டாய்க் கடைக்காரனைச் சுற்றிச் சிறுவர்கள் நின்று கொண்டிருந் தனர். அங்கே ஐயாசாமி சென்றான். "ஒரு மிட்டாய் என்ன விலை ?" என்று கேட்டான்.

"இரண்டு காசுகள்" என்றான் விற்பவன். "மூன்று காசுக்கு இரண்டு மிட்டாய் தருவாயா ?" என்று கேட் டான். "சரி தருகிறேன் !" என்றான் மிட்டாய்க்காரன். கை நிறைய மிட்டாய்களை வாங்கிக் கொண்டான்.

ஐயாசாமியும் அவன் நண்பர்களும் சிறிது தூரம் தள்ளிப்போய் நின்றுகொண்டனர். மிட்டாய்க் கடைக் குப் போகிறவனைப் பார்த்ததும், "இங்கே வாடா" என்று கூப்பிட்டு, "அங்கே காசு கொடுத்து வாங்கும் மிட்டாயை என்னிடம் வாங்கிக் கொள்" என்றான். இரண்டு காசுக்கு ஒரு மிட்டாய் வீதம் விற்றான்.

ஐயாசாமியின் நண்பர்கள் குப்பன், சொக்கன், தங்கம் ஆகிய மூவரும் மிட்டாய்க் கடையைச் சுற்றி

நின்றுகொண்டனர். எந்தப் பக்கத்தில் இருந்து சிறுவர்கள் வந்தாலும் அவர்களை மிட்டாய்க்காரனிடம் செல்ல விடாமல் தடுத்தனர். மெல்லப் பேசி ஐயாசாமியிடம் அனுப்பி வைத்தனர்.

ஐயாசாமி எல்லோரிடமும் இரண்டு காசுக்கு ஒரு மிட்டாய்வீதம் விற்று இலாபம் சம்பாதிப்பதைப் பார்த்தான் கடைக்காரன். அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. வயிறு எரிந்தது. "ஏண்டா பொடியா, உன் எலும்பை எண்ணட்டுமா?" என்று ஐயாசாமியைப் பார்த்துக் கத்தினன்.

"விற்ற காசை எண்ணி எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போக விருப்பம் இல்லையா? சிறைக்குப் போக விருப்பம் இருந்தால் என் எலும்பை எண்ண வா!" ஐயாசாமியின் பேச்சைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர்.

அங்கிருந்த இன்னொரு கடைக்காரர் மிட்டாய்க்காரனைத் தேற்றினர். ஐயாசாமியிடம் நயமாகப் பேசி அவனை அங்கிருந்து அனுப்பி வைத்தார். கீரியையும் பாம்பையும் வைத்து ஒருவன் வித்தைக் காட்டிக் கொண்டிருந்தான். ஐயாசாமியும் அவன் நண்பர்களும் அங்கே படையெடுத்தனர்.

வித்தை காட்டுகிறவனைச் சுற்றிலும் பெரிய கூட்டம் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்தை முட்டி அதன் உள்ளே புகுந்து முன்னல் போய் நின்முன் ஐயாசாமி. நிற்பவர்களை இடித்துக் கொண்டு புகுந்த அவனைப் பார்த்து அங்கிருந்தவர்கள் முணுமுணுத்தனர். ஐயாசாமியா அதைப் பொருட்படுத்துவான்?

அவன் நண்பர்களும் சரியான இடம்பார்த்து உள்ளே நுழைந்து விட்டனர். வித்தைக்காரன் கீரியைத் தூக்கிக் கொண்டு கூட்டத்தினரைச் சுற்றி வந்தான். "உங்கள் கண்முன்னால் இப்போது கீரியும் பாம்பும் சண்டையிடும்! காசு கொடுங்கள்! காசு கொடுங்கள்!" என்று கை நீட்டி வசூல் செய்து கொண்டிருந்தான்.



பிறகு பாம்புக் கூடையை எடுத்துக் கொண்டான். அந்தப் பாம்பின் பெருமைகளை அளக்க ஆரம்பித்துவிட்டான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான் ஐயாசாமி; பொறுமை தீர்ந்தது; வித்தைக்காரன் கதைகளை வளர்த்துக் கொண்டிருந்தான். சண்டையைத் தொடங்கவில்லை!

பாம்புக் கூடையைக் கீழே வைத்துவிட்டு மீண்டும் கீரியைத் தூக்கிக் கொண்டான். அந்தக் கீரியைப்

பிடித்த கதையைச் சொல்லத் தொடங்கிவிட்டான். எல்லோரும் இமைக்காமல் அவன் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஐயாசாமி அதுதான் சமயமென்று தனியே கிடந்த பாம்புக் கூடையைத் தூக்கிக் கொண்டு கூட்டத்தை இடித்துத் தள்ளிவிட்டு வேகமாக ஓடத் தொடங்கினான். வித்தைக்காரனுக்கு ஒரு வினாடி என்ன செய்வதென்று புரியவில்லை. மறுவினாடி அவனைத் துரத்திக் கொண்டே ஓடினான்.

ஐயாசாமியின் நண்பர்கள் சிரித்துக் கொண்டே பின்னால் ஓடினார்கள். முயல் குட்டி போல வேகமாக முன்னால் ஓடினான் ஐயாசாமி. மூச்சுவாங்கப் பின்னால் ஓடினான் வித்தைக்காரன். இந்த ஓட்டப் பந்தயத்தில் யாருக்கு வெற்றி? என்பதை அறிய ஆவலுடன் சிலர் ஓடினார்கள்.

★



ஓடிக்கொண்டே இருந்த ஐயாசாமி திரும்பிப் பார்த்தான். வித்தைக்காரன் தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்தத் தெருவின் திருப்பத்தில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள்.

ஐயாசாமி ஓடி வருவதன் காரணம் அவளுக்குத் தெரியாது. பாம்புக் கூடையை அவள் கையில் கொடுத்து, "இதைப் பார்த்துக்கொள் பாட்டி! கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து வாங்கிக் கொள்கிறேன். யார் கேட்டாலும் கொடுக்காதே!'' என்று கூறிவிட்டு ஓடத் தொடங்கினன்.

சில நிமிடத்தில் கிழவி உட்கார்ந்திருக்கும் திருப்பத்தை வித்தைக்காரன் அடைந்துவிட்டான். ஓடி வந்து கொண்டிருந்தவன் கிழவியின் கையில் பாம்புக் கூடையைப் பார்த்ததும் நின்முன்.

"ஏ கிழவி, அந்தப் பொடியன் இதை உன் கையில் கொடுத்து விட்டு ஓடுகிருனு? கொடு! என்னிடம்'' என்முன். கோபமும் ஆத்திரமும் அவனுக்குப் பொங்கின. கிழவிக்கு ஒன்றும் புரியவில்லே.

"இதை கொடுத்தவன் ஒரு சிறுவன்! நீ வந்து கேட்கிருயே! என்ன நியாயம்?''

"நீதான் பெரிய நியாயத்தைத் கண்டவள்! அந்தக் கூடையில் என்ன இருக்கிறது தெரியுமா?" அவன் கேட்டவுடன் பாட்டி கூடையைத் திறந்தாள். அதில் உள்ள பாம்பைப் பார்த்ததும் "ஓ" என்று அலறிக் கொண்டு கூடையைத் தூர எறிந்தாள்.

"அந்தப் பாவிப்பயல் இதைப் போய் என் கையில் கொடுத்து விட்டானே!" என்று ஏசினுள் கிழவி. கிழவி எறிந்த வேகத்தில் பாம்பு ஒரு பக்கமும் கூடை ஒரு பக்கமும் விழுந்தன. இரண்டையும் எடுத்துக் கொண்டு வித்தைக்காரன் போனுன்.

ஐயாசாமியின் நண்பர்கள் என்று தெரிந்தால் வித்தைக்காரன் எங்கே தங்களை உதைக்க வருவானே என்று எண்ணி நடுங்கியவர்களாய் குப்பனும் தங்கமும் ஆளுக்கு ஒரு பக்கம் ஓடினுர்கள். சொக்கன் அவர்களுக் கெல்லாம் முன்னுல் ஓடிக்கொண்டிருந்தான்.

சொக்கன் வீட்டை அடைந்தான். என்ன நடக்குமோ என்று அவன் உள்ளம் பயந்து கொண்டே இருந்தது. நேற்று இரவ அவன் தங்கைக்குக் காய்ச்சல் அதனுல் மருத்துவரிடம் அழைத்துப் போகுமாறு அவன் தாயிடம் அவன் தந்தை பணம் கொடுத்துவிட்டுச் சென்ருர்.

அதில் ஒரு ரூபாயைத் தெரியாமல் எடுத்துக்கொண்டு சந்தைக்குப் போனுன் சொக்கன். அதனுல்தான் வீட்டின் உள்ளே நுழைவதற்குத் தயங்கிக் கொண்டே வெளியே நின்ருன். உள்ளே இருந்து அப்பா வெளியில் வந்தார்.

"ஏன்டா சொக்கா, வீட்டில் வைத்திருக்கும் காசைத் திருடிக் கொண்டு சந்தைக்குப் போனுயா? என்ன துணிச் ல்டா உனக்கு!" என்று கூறிக் கொண்டே அவன்

முதுகில் இரண்டு வைத்தார். அதற்குள் அவன் அம்மா ஓடி வந்தாள்.

"அந்த ஐயாசாமியோடு சேர்ந்து இப்படிக் கெட்டுப் போகிருன்!" என்ருள் அவன் தாய்.

"அவனேடு சேராதே என்று ஆயிரம் முறை சொல்கிறேன்! உன் புத்தியில் எட்டவில்லையா?" என்று அவனை மீண்டும் அறைந்தார். மேலும் அடிவிழுவதற்குள் அவன் தாய் அவனை உள்ளே அழைத்துச் சென்று விட்டாள்.

இது சந்தைக்குப் போய் வந்த சொக்கனுக்குக் கிடைத்த வரவேற்பு. தங்கத்திற்கு அவன் வீட்டில் கிடைத்த வரவேற்பு எப்படி தெரியுமா?

ஞாயிற்றுக்கிழமை பள்ளி விடுமுறை நாள். அதனுல் தங்கத்தின் தந்தை, பகல் உணவை அவனிடம் கழனிக்குக் கொடுத்தனுப்பும்படி வீட்டில் சொல்லிவிட்டுப் போனுர். பகலில் தங்கம் வீட்டில் இருந்தால் கொடுத்தனுப்பலாம். அவன்தான் சுற்றுவதற்குச் சந்தைக்குப் போய்விட்டானே!

அவனை நம்பி இருந்த அவன் தந்தை ஏமாந்தார். அவரை உண்ணுவிரதம் இருக்க வைத்து விட்டான். வீட்டுக்கு வந்தவர் கொதித்தார்; கோபத்தால் குதித்தார்!

"அவனுக்குச் சோறு போடாதே! உள்ளே வந்து நுழையட்டும் அவனை என்ன செய்கிறேன் பார்!" தந்தையின் கோபக் குரல் வாசலில் வந்து நின்ற தங்கத்தின் காதில் விழுந்தது. உள்ளே நுழைவதற்கு அஞ்சி மூன்ருவது வீட்டுத் திண்ணையில் போய்ப் பதுங்கிக் கொண்டான்!

காலையில் மாடுகளை ஓட்டிச் சென்ருன் குப்பன். சந்தைக்குச் சென்றுவிட்டதால் மாலையில் ஒழுங்காக

மாடுகளைக் கொண்டுவந்து சேர்க்க முடியவில்லை. மாட்டைக் காணவில்லை என்று ஒருவர்பின் ஒருவராக வந்து குப்பனின் தாயிடம் முறையிட்டார்கள்.

"அவன் தந்தை ஊருக்குப் போயிருக்கிறார். ஒரு வாரத்தில் வந்து விடுவார். அதுவரை ஒழுங்காக மாடு களைப் பார்த்துக் கொள்ளச் சொல்கிறேன். இந்தப் பையன் இப்படி ஊர் சுற்றுகிறானே!" என்று அங்கலாய்த் தாள்.

இரண்டு பேர் அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டு சென்று விட்டனர். மூன்றாவது முத்தநாதன் வந்தான். ஊரில் அவன் ஒரு முரட்டுப் பேர்வழி. அவன் வந்ததும் குப்பனின் தாய் பயந்து கொண்டே எழுந்து நின்றாள்.

"உங்கள் மனத்தில் என்னதான் நினைத்துக் கொண் டிருக்கிறீர்கள்? மாடு மேய்ப்பதாக எண்ணமா? இந்த ஊரையே ஆள்வதாக எண்ணமா? என் மாடு வீடு வந்து சேரவில்லை. உன் மகன் யாருக்காவது விற்று விட்டானா?"

"ஐயோ! என்ன இப்படி கேட்கிறீர்கள்? விரைவில் உங்கள் மாட்டைத் தேடிக்கொண்டு வந்து சேர்க்கச் சொல்கிறேன்!" என்று கெஞ்சினாள். "அதுவரையில் உங்கள் மாடு என் வீட்டில் இருக்கட்டும்!" என்று அவன் மாட்டை அவிழ்க்கத் தொடங்கினான்.

"நான் ஏழை! ஒரு மாடு வைத்திருக்கிறேன்..." கெஞ்சினாள். "நான் மட்டும் என்ன பத்து மாடா வைத் திருக்கிறேன்?" என்று கூறிக் கொண்டே மாட்டை ஓட்டிக் கொண்டு போனான்.

சில நிமிடங்கள் கழித்து குப்பன் வந்து சேர்ந்தான். தாய் மிகுந்த கோபத்தோடு பேசினாள். "ஏன்டா பள்ளிக்

கூடம் போய் படிக்கத்தான் முடியவில்லை! ஒரு வகுப்பில் இருந்து இன்னொரு வகுப்புக்குப் போக மூன்று ஆண்டுகள் எடுத்துக் கொண்டாய். மாடு மேய்ப்பது கூடவா முடியவில்லை?''

குப்பன் பேசாமல் நின்றான். "நீ சம்பாதித்துப் புதிய மாடு வாங்க வேண்டாம்! இருக்கும் மாட்டைக்கூட ஒழித்து விட்டாயேடா முத்தநாதன் முரடன், முதலில் அவன் மாட்டைக் கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டு நம் மாட்டை ஓட்டி வா! நிற்காதே இங்கே!'' என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாள்.

அடுத்த நாள் காலை. ஐயாசாமியின் தாத்தா வள்ளியப்பர் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் மிகவும் நல்லமனிதர். அதில் ஊராருக்கு ஐயமில்லை. அவருக்கு மூன்று சொத்துக்கள். அவர் குடியிருக்கும் வீடு, ஐயாசாமி ஆட்சி நடத்தும் கொய்யாத் தோப்பு ஆகிய இரண்டு சொத்துக்களாலும் எந்தத் துன்பமும் அவருக்கு வருவதில்லை.

அவருடைய மூன்றாவது சொத்து ஐயாசாமி. ஐயாசாமியின் தாய் அவருக்கு ஒரே மகள். ஐயாசாமிக்கு மூன்று வயது இருக்கும்போது அவள் இறந்து விட்டாள். மருமகனிடம் இருந்த ஐயாசாமியைத் தான் எடுத்துக் கொண்டு வந்து வளர்த்து வந்தார்.

தன் குலத்தை விளங்க வைக்க இருக்கும் ஒரே விளக்கு என்பதால் மட்டுமில்லை. இயல்பாகவே அன்பும் இரக்கமும் உடையவர். அதனால்தான் ஐயாசாமி ஊரையே கலக்குகிறான் என்று எல்லோரும் பேசிக் கொண்டனர்.

பொழுது விடிந்ததும் சொக்கனின் தாய் வந்தாள். ஐயாசாமியால் தன் மகன் அடியோடு கெட்டுவிட்டான் என்று வள்ளியப்பரிடம் முதல் வழக்கைக் கொடுத்தாள். அதன் பின்னுல் தங்கத்தின் தந்தை வந்தார். குப்பனின் தாய் வந்தாள்.



எல்லோரும் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். "நேற்று காலையில் போனவன் இன்னும் வீடு திரும்பவில்லை. அவனைத் திருத்துவதற்கு நானும் எவ்வளவோ முயற்சி செய்கிறேன்!" என்ருர்.

"அவன் இந்த ஊருக்கே நெருப்பாக இருக்கிருன்! அவன் ஆடுகிற கூத்து சொல்லி முடியாது" என்று ஆத்திரமாகப் பேசினுர் தங்கத்தின் தந்தை. வள்ளியப்பர் தம் பேரனின் செயலுக்கு மிகவும் மனம் வருந்தினுர்.



குப்பன் முத்தநாதனின் மாட்டைத் தேடி எங்கெங்கோ அலைந்தான். கிடைக்கவில்லை. முகம் கருத்து உடல் சோர்ந்து கொய்யாத் தோப்புக்கு வந்து சேர்ந்தான். தன் ஆருயிர்த் தோழன் ஐயாசாமியைத் தேடினன்.

அவன் ஒரு மூலையில் ஓணன் பிடித்துக் கொண்டிருந்தான். பச்சை ஓணன் ஒன்று அவனிடம் வசமாகச் சிக்கிக் கொண்டது. அதன் கழுத்தில் சுருக்குக் கயிறு போட்டு இழுத்துக் கொண்டிருந்தான். குப்பன் அங்கே வந்து சேர்ந்தான்.

“ஏன்டா, ஓணன் பிடிப்பதைத் தவிர உன்னால் வேறு என்னடா பிடிக்க முடியும்?” என்று கேட்டான் குப்பன். உடனே ஐயாசாமி, “அங்கே பாருடா!” என்ருன். சிறிது தூரத்தில் உள்ள ஒரு மரத்தடியில் இரண்டு அணில்களைக் கட்டி வைத்திருந்தான்.

அதைப் பார்த்ததும் குப்பனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. “இந்த அணில்களை எப்படிடா பிடித்தாய்?”

“எப்படியோ பிடித்தேன்! உனக்கு வேண்டுமானல் ஒன்றைப் பிடித்துக் கொண்டு போடா!” என்று அலட்சியமாகக் கூறினன் ஐயாசாமி.

"உன்னோடு சந்தைக்கு வந்ததால் மாடுகளை ஒழுங்காக அவரவர் வீடுகளில் சேர்க்க முடியவில்லை. முத்தநாதனின் மாட்டைக் காணவில்லை. அதனால் எங்கள் வீட்டில் இருந்த ஒரேமாட்டை அவன் பிடித்துக்கொண்டு போய்விட்டான்!" என்றான் வருத்தத்துடன்.

"அதற்கு ஏன்டா வருந்துகிறாய்? மாடு எங்கே இருந்தாலும் நான் பிடித்துக்கொண்டு வந்து விடுகிறேன்!"

"இருந்தால்தானே பிடிப்பதற்கு? எல்லா இடங்களிலும் தேடிவிட்டேன். கிடைக்கவில்லை. இப்போது நான் போய் மாடுகளைக் கழுவி ஓட்டிக் கொண்டு போகப் போகிறேன். என் அம்மாவிற்கு என்ன பதில் சொல்வேன்? வழக்கமாக என் வீட்டில் பால் வாங்குகிறவர்களுக்கு என்ன செய்வேன்?" புலம்பினான் குப்பன்.

"அழாதேடா குப்பா! நான் இருக்கும் போது உனக்கு என்னடா கவலை! மாடு இந்த ஊரில் இல்லாமல் எங்கே போகும்? ஊரையே கலக்கி விடுகிறேன்! நீ போய் உன் வேலையைப் பார்! மாலை நான் உன்னை வந்து சந்திக்கிறேன்!" அவன் பேச்சு குப்பனுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

குப்பன் சென்றான். குளத்தில் இறங்கி மாடுகளை நன்றாகக் கழுவினான். மணி நான்கிருக்கும். எல்லா மாடுகளையும் ஓட்டிக்கொண்டு ஊருக்குள் போனான் ஒழுங்காக மாடுகள் வீடுகளில் போய்ச் சேர்ந்தன. தன் வீட்டிற்கு வெறுங்கையோடு போய் நின்றான்.

அவன் தாய் வெளியே வந்தாள். "என்னடா, முத்தநாதன் மாடு கிடைத்ததா?" பேசாமல் நின்றான் குப்பன்.

“நம் மாட்டை அவன் ஓட்டிக் கொண்டு போய்விட்டானே! இப்போது நம்மிடம் பால் வாங்குகிறவர்கள் வருவார்களே! என்னடா செய்யப் போகிறாய்?”

வாயைத் திறக்கவில்லை குப்பன். அவன் முதுகிலே ஒன்று வைத்தாள். “மாட்டைக் கண்டு பிடிக்காமல் இந்த வீட்டில் நுழையாதே!” என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினாள். கண்ணைக் கசக்கிக் கொண்டு நடந்தான் குப்பன்.

வழியிலே ஒரு பெரிய சொம்போடு வந்து கொண்டிருந்தான் ஐயாசாமி. அவனைப் பார்த்ததும் நின்றான் குப்பன். “ஏன்டா குப்பா, அழுகிறாய்? நான் மாலையில் உன்னைச் சந்திக்கிறேன் என்று சொன்னேனே! மறந்து விட்டாயோ?” என்றுகேட்டபடியே சொம்பைக் குப்பனின் கையில் கொடுத்தான் ஐயாசாமி.

சொம்பைப் பார்த்தான் குப்பன். சொம்பு நிறைய பால் இருந்தது. “ஏதுடா இது?” குப்பனின் முகத்தில் வியப்பு! “உங்கள் மாட்டினுடைய பால் தான்டா!”

“எப்படிடா கறந்தாய்? இவ்வளவு அதிகமாக இருக்காதே!”

“முத்தநாதன் இனிமேல்தான் கழனியிலிருந்து திரும்புவான்! திரும்பிய பிறகு பால் கறப்பான்! நான் அவனுக்கு முன்பே சென்று விட்டேன். அவன் வீட்டுத் தோட்டம் உனக்குத்தான் தெரியுமே! மிகவும் பெரியது! ஒரு மூலையில் உங்கள் மாடு கட்டப்பட்டிருந்தது.

யாரும் இல்லாத நேரம் பார்த்து நான் கறந்து விட்டேன். பக்கத்தில் அவன் மாடு இருந்தது. சொம்பு நிறைய

வில்லை. சரி இருக்கட்டுமே என்று அவன் மாட்டுப் பாலை யும் சேர்த்துக் கறந்துகொண்டு வந்துவிட்டேன்!" என்று கூறிச் சிரித்தான்.

"என்னடா இது? பெரிய முரடன் முத்தநாதன்! அவன் வீட்டுத் தோட்டத்தில் நுழைய என்ன துணிச்சல் வேண்டும்!" வியப்பில் அதிகம் பேச முடியாமல் நின்றான் குப்பன்.

"சரிதான் போடா! பெரிய துணிச்சலைப் பார்த்து விட்டான். பால் தர வேண்டியவர்களுக்கு எல்லாம் தாராளமாகக் கொடுடா!" என்று கூறி விட்டுப் போய் விட்டான்.

முத்தநாதன் வீடு திரும்பினான். மனைவியிடம் "பால் கறக்கச் சொம்பு கொண்டுவா" என்று கூறி விட்டுத் தோட்டத்துப் பக்கம் சென்றான். முதலில் குப்பனின் மாட்டைக் கறப்பதற்குப் போனான். பால் வரவில்லை! யாரோ பால் கறந்துவிட்டுப் போயிருப்பதை உணர்ந்தான்.

அவனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. தன் மாட்டில் பால் கறக்கப் போனான். அதையும் யாரோ கறந்திருக்கிறார்கள் என்று அறிந்தான். அவன் மீசைத் துடித்தது. மனைவியைப் பார்த்துக் கேட்டான். தனக்குத் தெரியாது என்றாள்.

அவன் மீசையை முறுக்கினான். தோளைக் குலுக்கி னான். தொடையைத் தட்டினான். "எனக்குத் தெரியா மல் வந்தவன் எவன்?" என்று கத்திக் கொண்டு வீதிக்கு ஓடினான். யார் யாரையோ கேட்டுப் பார்த்தான்.

எல்லோரும் அவனைப் பார்த்து அஞ்சி நடுங்கிக் கொண்டு போனார்கள்.

"குற்றவாளியைக் கண்டுபிடிக்காமல் விடப்போவதில்லை" என்று குமுறிக் கொண்டிருந்தான். மறுநாள் ஐயாசாமியைக் குப்பன் சந்தித்தான். "இந்த ஊர் எல்லைக்கப்பால், மலையனூர் போகும் வழியில் மாந்தோப்பு ஒன்று இருக்கிறது. அங்கே சில மாடுகளைப் பார்த்தேன்..." முடிக்கவில்லை குப்பன்.

"முத்தநாதன் மாட்டைப் பார்த்தாயா? அதை முதலில் சொல்டா!" என்று கேட்டான் ஐயாசாமி. "பார்த்தேன்டா. அந்தத் தோப்புக்குச் சொந்தக்காரன் பொல்லாதவன். மனமிரங்கி எருமையை ஓட்டமாட்டான். அதனால் முத்தநாதனிடம் போய்ச் சொன்னால் அவன் எப்படியும் ஓட்டி வந்து விடுவான்!"

"முத்தநாதன் என்ன பெரிய மலையா? என்னிடம் அந்த மாட்டின் அடையாளங்களைச் சொல்டா! இப்போதே நான் போய் ஓட்டி வருகிறேன்! எவன் தடுக்கிறான்? எப்படித் தடுக்கிறான்? பார்க்கிறேன்!" என்று துடித்தான்.

அடையாளங்களைத் தெரிந்துகொண்டு ஓடினான். மலையனூர் போகும் வழியில் ஓடிக்கொண்டிருந்தான். வழியில் தெரிந்தவர்களிடம் கூடப் பேசவில்லை. மாந்தோப்பைப் பார்த்த பின்தான் நின்றான். அதன் சொந்தக்காரன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

"எங்கள் கிளியனூர் மாடு ஒன்று இந்தத் தோப்பிற்கு வந்து விட்டது. அதை அனுப்புங்கள். நான்

ஓட்டிக் கொண்டு போகிறேன்!" என்று கேட்டான் ஐயாசாமி.

"ஓட்ட முடியாது! போடா! இவர் பெரிய துரை!" என்றான் அலட்சியமாக.

"பெரிய துரை சொன்னால்தான் கேட்பீர்களோ? அப்படியானால் பெரிய துரையையே அனுப்பி வைக்கிறேன்!" என்று கூறிவிட்டுத் திரும்பிப் போகிறவனைப் போல நடந்தான். சொந்தக்காரனுக்குத் தெரியாதபடி ஒரு மூலைக்குப் போய் ஒளிந்து கொண்டான்.

அரைமணி கழிந்தது. சொந்தக்காரன் தோப்பை விட்டு வெளியே போனான். மேலும் அரை மணி நேரம் பொறுத்தான். சொந்தக்காரன் விரைவில் திரும்புவதாகத் தெரியவில்லை. தோப்பின் உள்ளே நுழைந்தான். ஒரு மூலையில் ஐந்து மாடுகள் கட்டப்பட்டிருந்தன.

ஐந்தையும் அவிழ்த்தான். தோப்புக்கு வெளியே ஓட்டினான். முத்தநாதனின் மாட்டை மட்டும் தான் பிடித்துக் கொண்டான். மற்ற நான்கு மாடுகளும் தோப்புக்குச் சொந்தக்காரனுடையவை. அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பக்கமாக அடித்து விரட்டினான்.

வேகமாக ஓட்டிக்கொண்டு வந்துகொண்டிருந்தான் ஐயாசாமி. அவனை எதிர்பார்த்துக் கொண்டே வழியில் வந்தான் குப்பன். குப்பனோடு சொக்கனும் தங்கமும் பேசிக் கொண்டு வந்தனர். மூவரும் ஐயாசாமியைப் பார்த்ததும் ஓடிப்போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

அந்த மூவரும் அவனைத் தூக்கி அந்த எருமை மாட்டின்மீது உட்கார வைத்தனர். "எங்கள் வீரன் வருகிறான்!

எங்கள் தீரன் வருகிறுன்! வணங்கிச் செல்லுங்கள்! வழியில் விலகி நில்லுங்கள்!" என்று அவர்கள் உற்சாகமாகக் கூவினுர்கள். கம்பீரமாக எருமை மாட்டின்மீது அமர்ந்து வந்தான் ஐயாசாமி.



"என்னடா இது கூத்து?" என்று கேட்பவர்களுக்கு "தெரியாது உங்களுக்கு? இதுதான் அரச ஊர்வலம்!" என்று கூறிச் சிரித்தனர். கொய்யாத் தோப்புக்கு வந்து சேர்ந்தனர். மூன்று நாட்களாக ஐயாசாமியைக் காணுமல் அவன் தாத்தா வள்ளியப்பர் கொய்யாத் தோப்பிற்கு வந்தார்.

தாத்தாவைப் பார்த்ததும் ஐயாசாமி ஒரு பெரிய கொய்யா மரத்தின் மீது ஏறினுன். அதன் ஒரு கிளையை இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தொங்கினுன். சொக்கனும் குப்பனும் தாத்தாவிடம் நயமாகச் சொன்னுர்கள்.

"உங்களைப் பார்த்ததும் பயந்துவிட்டான் ஐயாசாமி; அதனுல்தான் அப்படி மரத்தில் ஏறித் தொங்குகிருன். கீழே விழுந்தால் கைகால் உடைந்து விடும்! நீங்கள் கோபிக்காமல் பேசுங்கள்!"

இந்த நாடகமெல்லாம் தாத்தா அறியமாட்டாரா? "ஐயாசாமி, இறங்கி வாடா? என்னைப் பார்த்தா உனக்கு அச்சம்? ஏன்டா ஏமாற்றுகிருய்? வாடா கண்ணு! உன்னைப் பார்த்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன!" அவர் அன்புக் குரல் கேட்டு மெல்ல இறங்கி வந்தான்.



ஐயாசாமியின் தாத்தா வள்ளியப்பர், தம் பேரனுக்கு எவ்வளவோ அறிவுரைகளைச் சொன்னார். அவர் எவ்வளவு பொறுமையாகச் சொன்னாரோ அதைவிடப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான்.

தாத்தாவின் பக்கத்தில் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனைப் பார்க்கும் போது தாத்தாவுக்கே வியப்பாக இருந்தது. 'இவனையா ஊருக்கு நெருப்பு' என்கிறார்கள்? தானே கேட்டுக் கொண்டார்!

'பொழுது விடிந்ததும் வருகிற வழக்கு ஒழியாதா? பேரன் திருந்த மாட்டானா?' என்ற ஏக்கம் எப்போதும் அவன் தாத்தாவுக்கு இருந்து கொண்டே இருந்தது. ஐயாசாமிக்கோ எப்போது தாத்தாவை ஏமாற்றி விட்டு ஓடலாம் என்பதிலேயே எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது.

தூரத்தில் குப்பன் வந்து நின்றான். ஐயாசாமிக்குப் பக்கத்தில் அவன் தாத்தா இருந்ததால் அவனை அழைப்பதற்கு அச்சமாக இருந்தது குப்பனுக்கு. குப்பன் வந்து நின்றதை ஐயாசாமி புரிந்து கொண்டான். தாத்தாவிடமிருந்து எப்படி நழுவிச் செல்வது?

பூனை ஒன்று காலில் அடிபட்டுக் கத்திக் கொண்டே வந்தது. அதற்கு உதவி செய்பவன் போல எழுந்து ஓடினான். பூனையைத் தூக்கிக் கொண்டான். தாத்தாவைப் பார்த்து, "பக்கத்துத் தெரு நாட்டு மருத்துவரிடம் இதை எடுத்துப் போகிறேன் தாத்தா! ஏதேனும் மருந்து வைத்துக் கட்டுவார்!" என்று கூறி நழுவினான்.

சிறிது தூரம் சென்றதும் நின்றான். பூனையை ஒரு குப்பைத் தொட்டியில் வீசி எறிந்து விட்டான். அதற்குள் குப்பனும் வந்து சேர்ந்து கொண்டான். இருவரும் பேசிக் கொண்டே கொய்யாத் தோப்புக்குச் சென்றனர்.

தூரத்தில் மாந்தோப்புக்குச் சொந்தக்காரன் வந்து கொண்டிருப்பதைக் குப்பன் பார்த்தான். "அடே ஐயாசாமி, அதோ! வருகிற ஆள் யார் தெரிகிறதா?" என்று ஐயாசாமியைக் கேட்டான். ஐயாசாமி பார்த்தான்.

"ஓ! இவனா! நாம் எங்கே மறந்து விட்டிருப்போமோ என்று நினைவுபடுத்த வருகிறான்!" என்று கூறி ஐயாசாமி சிரித்தான். குப்பன் நடுங்கினான். "நம் ஊரில் முத்தநாதன் எப்படி முரடனோ. அதே போலப் பக்கத்து ஊரில் இவன் முரடனாம்! சின்னக் குழந்தைகள் கூட இவனைப் பார்த்தால் நடுங்குமாம்!" என்றான் குப்பன்.

"இவன் இல்லாத நேரத்தில் எல்லா மாடுகளையும் மூலைக்கு ஒன்றாக ஓட்டிவிட்டேன். உன் மாட்டை மட்டும் நான் பிடித்துக் கொண்டு வந்தேன்!"

"அப்படியா? அவன் வந்தால் நம் தோலை உரித்து விடுவான்! வாடா ஓடிவிடலாம்!" என்று பயந்து ஒரு பெரிய மரத்தின் பின்னால் போய் ஒளிந்து கொண்டான். மிகுந்த கோபத்தோடு ஐயாசாமியை எரித்து விடுபவன்

போலப் பார்த்துக் கொண்டே வந்தான் மாந்தோப்புக் காரன்.

அவனைக் கண்டதும் ஐயாசாமி, இரண்டு கைகளையும் தலைக்குமேல் தூக்கி வணங்கினான். "நானே உங்களைப் பார்க்க வரவேண்டும் என்று நினைத்தேன்; நீங்களே வந்து விட்டீர்கள்!" மிகவும் பயத்தோடும் பக்தியோடும் சொல்வது போல அழகாக நடித்தான் ஐயாசாமி.

"என்னடா கதையளக்கிறாய்? என் மாடுகளையெல்லாம் அவிழ்த்து எங்கே ஓட்டினாய்?" பற்களைக் கடித்தான் மாந்தோப்புக்காரன்.

"அத்தனை துணிச்சல் எனக்கு உண்டா? முத்தநாதனிடம் போய்,உன் மாடு பக்கத்து ஊர் மாந்தோப்பில் இருக்கிறது. அதன் சொந்தக்காரரின் காலில் விழுந்து கும்பிட்டால் உனக்கு மாடு கிடைக்கும் என்றேன்!

'நானா அவன் காலில் விழுவது? அவனை வந்து என் காலில் விழ வைக்கிறேன் பார்!' என்று சபதம் செய்து விட்டுப் போனான். அவன்தான் உங்கள் மாடுகளையெல்லாம் அவிழ்த்து ஓட்டியிருக்க வேண்டும்!" என்று நயமாகக் கூறி நிறுத்தினான்.

"'அப்படியா சொன்னான்? இப்போதே போகிறேன் அவன் முதுகெலும்பை மூன்று துண்டுகள் ஆக்கி அவன் கையில் கொடுத்து விட்டு வருகிறேன்!" என்று கோபத்தோடு புறப்பட்டான் மாந்தோப்புக்காரன். ஒளிந்து கொண்டிருந்த குப்பன் மெதுவாக ஐயாசாமியிடம் வந்தான்.

"என்னடா இது கூத்து?" என்று கேட்டான் குப்பன். "இந்த ஆண்டு நம் ஊரில் கூத்து நடக்க

வில்லை என்று வருந்தினையே! இப்போது நடக்கும் கூத்தைப்பார்! இவன் போய் முத்தநாதனைச் சந்திப்பதற்குள் நாம் குறுக்கு வழியில் ஓடிப்போய் இவன் வருகையை அவனுக்குத் தெரிவிக்க வேண்டும்!"

"ஏன்டா?" குப்பனுக்குப் புரியவில்லை.

"அப்போதுதான்டா அவனையும் சண்டைக்குத் தயாராக்க முடியும்! இரண்டு பக்கமும் சண்டை நன்ருக நடக்கும்! நாம் கொஞ்சம் உட்கார்ந்து பார்க்கலாம்!" என்று கூறிக்கொண்டே ஓடினன். குப்பனும் பின்னல் ஓடினன்.

ஐயாசாமி வேகமாக ஓடிச் சென்று முத்தநாதனிடம் போய் நின்ருன். அவனுக்கு மூச்சு வாங்கியது. இருந்தாலும் பேசத் தொடங்கினன். "ஐயா! ஐயா! உங்களுக்கு ஆபத்து!" என்று அலறினன்.

"என்னடா ஆபத்து!" அலட்சியமாகக் கேட்டான் முத்தநாதன்.

"உங்கள் மாட்டைப் பக்கத்து ஊர் மாந்தோப்புக்காரன் பிடித்துக் கட்டிவைத்திருந்தான். நாங்கள் ஓட்டி வந்துவிட்டோம். நீங்கள் அவன் காலில்விழுந்துகும்பிட்டு ஓட்டி வரவில்லையாம்! அதற்காக உங்களை மிரட்டுவதற்கு வந்து கொண்டிருக்கிருன்! நீங்கள் ஓடி ஒளிந்து கொள்ளுங்கள்! அவன் பொல்லாதவன்!" என்று மிகவும் அன்புடையவன்போல் குழைந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

முத்தநாதன் பயங்கரமாகச் சிரித்தான். "என்னை மிரட்ட ஒரு மனிதன் வருகிருன? அந்த எறும்பு எது

என்று பார்க்கிறேன்!" என்று கூறிக்கொண்டே வெளியே வந்தான். ஐயாசாமியும் குப்பனும் எதிர் வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டனர்.

மாந்தோப்புக்காரன் மிகுந்த கோபத்தோடு வந்தான் "என்னடா முத்தநாதா, உடம்பு எப்படி இருக்கிறது?"

"உன் உடம்பைப் போலவே ஒன்பது பங்கு வலிமையோடு இருக்கிறதுடா?" குரலை உயர்த்தி நெஞ்சத்தைத் தட்டிப் பேசினான்.

"அதனால்தான் என் மாடுகளை அவிழ்த்து ஓட்டினாயோ?" மாந்தோப்புக்காரனுக்குக் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது.

"அடுத்தவன் மாட்டைக் கட்டி வைத்துக் கொள்வது உன் பழக்கம்! எனக்கு அந்தப் புத்தி இது வரைக்கும் கிடையாது!" என்று முத்தநாதன் சொல்லி முடித்ததும் அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தான் மாந்தோப்புக்காரன்.

அவ்வளவுதான்! முத்தநாதனுக்கு வெறி வந்து விட்டது! இரண்டு பேரும் கட்டிப்புரண்டார்கள். ஒருவரையொருவர் கையால் அடித்துக் கொண்டார்கள் காலால் உதைத்துக் கொண்டார்கள். தோளில் இடித்துக்கொண்டார்கள். தலையால் முட்டிக் கொண்டார்கள். தரையில் மோதிக் கொண்டார்கள். உடம்பெங்கும் குத்திக் கொண்டார்கள்.

எல்லோரும் இந்தச் சண்டையைச் சூழ்ந்து நின்று வேடிக்கைப் பார்த்தனர். ஐயாசாமிக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. "இது போலச் சண்டை நாம் எங்கேடா

பார்க்கப் போகிறோம்!" என்று குப்பனிடம் சொல்லிச் சிரித்தான்.

பெரியவர் ஒருவர் வந்தார். அவர் சண்டையிடுகிற வர்களை விலக்கினார். ஊர் நாட்டாண்மைக்காரரிடம் அழைத்துச் சென்றார். நாட்டாண்மைக்காரர் ஊர் சபையைக் கூட்டினார். இருவர் வழக்கையும் விசாரித்தார்.

மாந்தோப்புக்காரன் சொன்னான் : "முத்தநாதன் என் மாடுகளையெல்லாம் அவிழ்த்து ஓட்டி விட்டதாக ஐயாசாமி சொன்னான். அதனால் நான் சண்டைக்குச் சென்றேன்."

முத்தநாதன் சொன்னான் : "நான் அவன் காலில் விழவில்லை என்பதால் என்னை மிரட்ட வருவதாக ஐயாசாமி என்னிடம் சொன்னான். அதனால் நான் ஆத்திரமாக சண்டையிட்டேன். உண்மையில் அவன் மாடுகளை நான் தொடவில்லை" என்றான்.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஐயாசாமியை ஒருவர் இழுத்து வந்து சபையில் நிறுத்தினார். "ஏன்டா பொடியா, இவையெல்லாம் உன் வேலையா?" என்று கேட்டார் நாட்டாண்மைக்காரர்.

"இந்த ஊரில் குத்துச் சண்டை நடந்து எவ்வளவோ காலம் ஆகிவிட்டது. நடத்திப் பார்க்கலாமே என்ற ஆவல்! அதற்குப் பொருத்தமாக இந்த இருவரும் கிடைத்தார்கள்! அதனால்தான்..."

"உன் குறும்புக்கு அளவே கிடையாதா?" என்றார் நாட்டாண்மைக்காரர். முத்தநாதனும் மாந்தோப்புக் காரனும் ஐயாசாமியைப் பார்த்துப் பல்லைக் கடித்தனர். சபையில் உள்ளவர்கள். "இவனைக் கண்டித்தால்

போதாது. இவன் தாத்தாவையும் அழைத்து வைத்துக் கண்டிக்க வேண்டும்!" என்றனர்.

"தாத்தாவை அழைத்து வாடா!" என்று ஐயாசாமியைப் பார்த்துச் சொன்னார் நாட்டாண்மைக்காரர். "தாத்தாவையா அழைத்துவர வேண்டும்?" என்று மீண்டும் கேட்டான். "ஆமாம்" என்றார்.

ஓடிச் சென்றான். போகும் வழியில், உடம்பு நலமில்லாமல் படுத்துக் கொண்டிருந்தார் ஒரு கிழவர். "தாத்தா, உன்னை ஊர் சபையில் அவசரமாக அழைக்கிறார்கள்" என்று சொல்லி அவரை எழுப்பி அனுப்பி வைத்தான். வெற்றிலைப் பாக்குக் கடையில் ஒரு கிழவர் உட்கார்ந்து விற்பனை செய்து கொண்டிருந்தார். அவரையும் "ஊர் சபையில் அழைக்கிறார்கள்; விரைவாகப் போங்கள்!" என்று அனுப்பி வைத்தான்.

குறைந்தது ஒரு பத்துக் கிழவர்களையாவது ஊர் சபைக்கு அனுப்பி வைத்திருப்பான். இறுதியாகத் தன் தாத்தாவை அழைத்துக் கொண்டு போனான். அங்கே பல கிழவர்கள் நின்று கொண்டிருந்தனர். எல்லோரும் ஐயாசாமியை எரித்து விடுவது போலப் பார்த்தனர்.

அவர்களையெல்லாம் ஐயாசாமியின் தாத்தா அமைதி படுத்தினார். அந்தச் சபையின் முன்னால் நின்று அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

"பெரியவரே, நீர் மன்னிப்புக் கேட்டால் போதுமா? உன் பேரன் என்றுதான் திருந்துவது? அவன் செயல்களுக்கு எல்லையே கிடையாதா?" சபையில் பலரும் கேட்டனர். அவர்களுக்கு விடை சொல்ல முடியாமல் தலைகுனிந்து நின்றார் வள்ளியப்பர்.

"என் மாடுகளை யெல்லாம் அவிழ்த்து ஓட்டியவன் இவனாகத்தான் இருக்க வேண்டும்" என்று கத்தினான் மாந்தோப்புக்காரன். அவனை அமைதி படுத்தினார் நாட்டாண்மைக்காரர். ஐயாசாமியையும் அவன் தாத்தாவையும் கடுமையாக எச்சரித்தார்.



"ஐயாசாமியின் கைவரிசை நிற்கவில்லை என்றால் கடுமையான தண்டனையை அடைய நேரும்" என்று அந்தச் சபையினரும் எச்சரித்தார்கள். பத்து ரூபாய் அபராதம் விதித்தார்கள். தாத்தா வள்ளியப்பர் மிகுந்த வருத்தமுடன் அபராதத்தைச் செலுத்திவிட்டுப் பேரனை அழைத்துச் சென்றார்.



அந்தக் கிளியனூரில் உள்ள சிறுவர்களுக்கு ஐயா சாமியோடு ஆடவில்லையென்றால் உறக்கமே வராது. பெற்றோர்கள் எத்தனைதான் தடுத்தாலும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. வீட்டுக்குத் தெரியாமல் வந் தாவது விளையாடுவார்கள்.

அன்றைக்கும் அப்படித்தான். கொய்யாத் தோப்பில் சிறுவர்கள் 'நொண்டி ஆட்டம்' ஆடிக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் 'நொண்டி' வந்தனர். நாட்டாண்மைக் காரரின் மகன் மாணிக்கம் தான் நொண்டிவர முடியாது என்றான்.

"என் அப்பா ஊருக்கே பெரியவர்டா! அவர் மகன் நான்! நான் நொண்டி வரலாமா?" என்று கேட்டான்.

"ஆமாம்டா! நீ நொண்டக் கூடாதுடா!" என்றான் ஐயாசாமி. "மற்றவர்கள் நொண்டி வந்து என்னைப் பிடிக்கட்டும்." என்றான் ஆணவத்துடன்.

"நீ நொண்டாமல் இருப்பதைப் பார்ப்பவர்கள் உன்னை வலிமையில்லாதவன், முட்டியில் சக்தி

யில்லாதவன் என்று கேலி செய்வார்கள்டா!'' என்றான் ஐயாசாமி.

"நானா வலிமையில்லாதவன்? எவனுக்கு வலிமை இருக்கிறதோ அவனை என்னிடம் சண்டைக்கு வரச் சொல் பார்க்கலாம்!'' என்று வீரம் பேசினான்.

"உன் கைகளுக்கு வலிமை இருக்கலாம்; ஆனால் உன் கால்களுக்கு வலிமை இருப்பதை எப்படிடா காட்டுவாய்?''

"எப்படி காட்டுவது? சொல் காட்டுகிறேன்!'' என்று குதித்தான் மாணிக்கம். ஐயாசாமி தோப்பில் உள்ள ஒரு கொய்யா மரத்தைக் காட்டினான். இந்தத் தோப்பில் இருப்பதிலேயே சின்னமரம் இதுதான். இதில் ஏறிக் கீழே குதித்துவிடு! எல்லோரும் உன் கால் வலிமையை உணர்வார்கள்; பிறகு நீ நொண்டவே வேண்டியதில்லை!'' என்றான்.

ஒரு நிமிடம் தயங்கினான் மாணிக்கம். மற்ற சிறுவர்கள் அவனைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினர். அவர்களை அடக்கினான் ஐயாசாமி. "ஏன்டா சிரிக்கிறீர்கள்? இதோ மாணிக்கம் ஏறிக் குதிக்கப் போகிறான் பாருங்கள்!'' என்று மாணிக்கத்தை உற்சாகப் படுத்தினான்.

மாணிக்கம் வேறு வழியின்றித் தாங்கிக் கொண்டே ஏறினான். பயந்து கொண்டே கீழே குதித்தான். "ஐயோ'' என்று கத்தினான். "கால் வலிக்குதுடா! கால் வலிக்குதுடா! என்னால் நடக்க முடியவில்லைடா!''

"இனிமேல் நீ நொண்டி வந்து பிடிக்க வேண்டியது இல்லைடா! உன் கால் வலிமையை நாங்கள் நன்றாக

அறிந்து கொண்டோம்!'' என்றான் ஐயாசாமி. மற்ற சிறுவர்கள் சிரித்தனர்.

''என்னை மெய்யாகவே நொண்டி ஆக்கி விட்டாய் டா! என் கால் நரம்பு சுளுக்கிக்கொண்டது! நான் எப்படிடா நடந்து வீட்டுக்குப் போவேன்?'' என்று அழுது கொண்டே நடக்க முடியாமல் நடந்தான் மாணிக்கம்.

''ஆணவம் பிடித்தவனைச் சரியாக அடக்கினாய்டா!'' என்று சொக்கனும் தங்கமும் ஐயாசாமியின் கையைப் பிடித்துக் கொண்டு குதித்தனர். பின்னால் வரப்போவதை அவர்கள் கண்டார்களா?

மாணிக்கம் அழுது கொண்டே வீட்டுக்குப் போனான். நடந்ததை எல்லாம் அவன் தன் தாயிடம் சொன்னான். அவள் ஐயாசாமியைக் கண்டபடி ஏசினாள். அவன் தந்தை வீட்டுக்கு வந்ததும் கத்த ஆரம்பித்து விட்டாள்.

''ஊரில் நீங்களும் ஒரு பெரிய மனிதரா? உங்களுக்கு எதற்கு நாட்டாண்மை? இந்த வேலையைச் சேலை கட்டிய வளிடம் விட்டு விடுங்கள்! நன்றாக நடத்துவாள். ஒரு சின்னப் பையனை அடக்கக் கையாலாக வில்லை!...''

''என்ன நடந்தது? புரியும்படிச் சொல்லேன்''

''உங்களுக்குப் புரிவதற்குள் ஐயாசாமி ஊரையே அழித்து விடுவான்! நம் பையன் காலையே உடைத்து விட்டான்! பார்த்தீர்களா?'' என்று மாணிக்கத்தின் காலைக் காட்டினாள்.

அவருக்குக் கோபம் தாங்க முடியவில்லை. நேராக ஐயாசாமியின் தாத்தாவைத் தேடிப் போனார். ''ஐயா,

பெரியவரே! இந்த ஊரில் நீங்களும் உங்கள் பேரனும் மட்டுமே இருக்கப் போகிறீர்களா? நாங்கள் எல்லோரும் ஓடி விடலாமா?...''

"ஐயோ! என்ன நடந்தது? எனக்கு ஒன்றும் புரிய வில்லையே!'' என்று பதறினர் வள்ளியப்பர்.

"உமக்கு எதுதான் புரிந்தது? உங்கள் பேரன் என் பையன் காலை உடைத்து விட்டான்!''

"நான் அவனை இப்போதே அழைத்துக் கண்டிக் கிறேன்!...''

"நீர் என்ன கண்டிப்பது? கொய்யாத் தோப்பு வருமானம் இருப்பதால்தானே பேரன் குதிக்கிருன்? என்ன செய்கிறேன் பார்! இந்த ஊரைவிட்டே உங்கள் இருவரை யும் ஓட்டுகிறேன்!'' என்று சபதம் செய்துவிட்டுப் போனுர் நாட்டாண்மைக்காரர்.

அவருக்கு எளிதில் கோபம் வராது. கோபம் வந்து விட்டால் மிகவும் பொல்லாதவர். தாத்தா வள்ளியப்பர் மிகுந்த குழப்பத்தோடு பேரனை எதிர்பார்த்துக் கொண் டிருந்தார்.

நாட்டாண்மைக்காரரின் மகன் மாணிக்கத்தின் காலை நொண்டி ஆக்கியது தாத்தாவின் காதுக்கு எட்டியிருக் கும் என்பதை ஐயாசாமி நன்ருக அறிவான். அதனுல் இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்பினுன். மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தான்.

பேரனை எதிர்பார்த்து உறங்காமல் இருந்தவர், அப் போதுதான் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார். பூனைபோல் உள்ளே நுழைந்தான். சமையலறைக்குச் சென்ருன்.

சமையல் வேலைகளையும் தாத்தாவே செய்வது வழக்கம். சொக்கனின் தாய் சில வேளைகளில் வந்து உதவுவாள்.

அவளும் அன்று வெளியூர் சென்றிருந்தாள். தாத்தாவே சுட்டு வைத்த தோசை அவனுக்காக மூடி வைக்கப்பட்டிருந்ததை உணர்ந்தான். சாப்பிட்டான். திண்ணையில் சென்று படுத்துக் கொண்டான்.

பொழுது விடிவதற்கு முன் தாத்தா விழித்துக் கொண்டார். மெல்ல எழுந்து சென்று ஐயாசாமியின் பக்கத்தில் போய் உட்கார்ந்தார். ஏனென்ருல் தூங்கி எழுந்தவுடன் தாத்தா கண்ணில் படாமல் ஓடிவிடுவான்!

ஐயாசாமி கண் விழித்தான். நாட்டாண்மைக்காரர் கோபத்தோடு வந்து பேசிச் சென்றதை தாத்தா அவனிடம் சொன்ஞர். "இப்படியும் செய்யலாமா?" என்று கேட்டார். "பேசாமல் அவரிடம் போய் மன்னிப்புக் கேட்டுக்கொள்; இல்லாவிட்டால் நாம் இவ்வூரில் பிழைக்க முடியாது!" என்ருர்.

ஐயாசாமி மறுக்கவில்லை. சரி என்று தலையை ஆட்டி விட்டுப் புறப்பட்டான். அவஞ போய் மன்னிப்புக் கேட்பான்? நேராக வழக்கம்போல் கொய்யாத் தோப்புக்குப் போய் விட்டான்.

நாட்டாண்மைக்காரருக்குக் கோபம் தணியவில்லை. வள்ளியப்பருக்குச் சொந்தமான கொய்யாத் தோப்பை வழக்கமாக குத்தகை எடுக்கும் பொன்னம்பலத்தை அழைத்தார். "ஐயாசாமியின் கொட்டத்தை அடக்க வேண்டும். அதனுல் அவன் தாத்தாவின் கொய்யாத் தோப்பை யாரும் குத்தகை எடுக்காமல் தடுக்க வேண்டும்!" என்று அதிகாரமாகக் கூறினர்.

பொன்னம்பலத்தால் ஊருக்குப் பெரியவர் சொல் வதைக் கேட்காமல் இருக்க முடியவில்லை, அதைவிடக் குறைந்த தொகைக்கு வேறு ஒரு தோப்பை நாட்டாண் மைக்காரரே ஏற்பாடு செய்து கொடுத்தார்.

பேரனால் வருகின்ற தொல்லைகள் அளவுக்கு மீறிப் போவதைத் தாத்தா வள்ளியப்பர் உணர்ந்து வருந்தினர். அவர் எத்தனை கூறியும் ஐயாசாமியின் பாதை மாற வில்லை. எதிர்ப்புகளைக் கண்டு தாத்தா சோர்வடைந் தார். பேரனோ, "எதிர்ப்பா? வரட்டுமே!" என்றான்.

பொன்னம்பலம் தங்கள் தோப்பை குத்தகை எடுத் திருந்தபோது ஐயாசாமி நிறைய உதவி செய்வான். மரத் தில் உள்ள பழங்களையெல்லாம் பறித்துப் போடுவது அவன் வேலை. அவனோடு அவன் நண்பர்கள் சொக்கன் தங்கம், குப்பன் ஆகியவர்களும் பறித்துப் போடு வார்கள்.

பொன்னம்பலம், பறித்துப் போடுவதற்கு ஆள் வைக்காமல் தானே ஐயாசாமியின் உதவியோடு மூட்டை யாகக் கட்டி எடுத்துக் கொண்டு வந்துவிடுவான். இப் போது எப்படி என்று சிந்தித்தான். ஐயாசாமியை மெதுவாக அழைத்துப் பார்த்தான்.

"நான் மட்டும் இல்லை; என் நண்பர்களும் வந்து உனக்காக உதவி செய்கிறோம்!" என்றான். அப்படியே அவனும் அவன் நண்பர்களும் புதிய கொய்யாத் தோப்புக்குச் சென்றனர். ஆளுக்கு ஒரு மரத்தில் ஏறிக் கொண்டனர்.

பழங்களைப் பறித்துப் போட்டனர். ஐயாசாமியும் அவன் நண்பர்களும் பறித்துப் போடுவதைப் பொன்னம் பலம் பொறுக்கி எடுத்துச் சேர்த்தான். எடுக்கும் வேலை

கூட உங்களுக்கு வேண்டாம்! நீங்கள் படுத்து உறங்குங்கள்! எல்லாவற்றையும் முடித்துவிட்டு நாங்கள் உங்களை எழுப்புகிறோம்!'' என்றான் ஐயாசாமி.

அதுபோல் அவன் பலமுறை செய்திருக்கிறான். அதனால் பொன்னம்பலம் மரத்தடியில் மகிழ்ச்சியாக உறங்கத் தொடங்கினான். ஐயாசாமி அதுதான் சமய



மென்று நண்பர்களைப் பார்த்துக் கண்ணடித்தான். எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று அவன் முன்பே சொல்லி வைத்திருந்தான்.

ஐயாசாமி ஒவ்வொரு பழத்தையும் கடித்துக் கடித்துக் கீழே போட்டான். குப்பன் பழத்தை ஒரு கடி கடித்தால் பக்கத்தில் உள்ள சொக்கன் இரண்டு கடி கடிப்பான். தங்கம் இருக்கிறானே, அவன் இவர்களைவிட அவசரக்காரன்.

சொக்கன் ஒரு பழத்தை இரண்டு கடி கடிப்பதற்குள் இரண்டு பழத்தில் இரண்டு கடிகடித்துவிடுவான் தங்கம். இப்படிப் பழங்களைக் கடித்துப் போடுவதில் அவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

"ஒரு நாளைக்கு மூன்று கூடைகள் பறிப்பார்கள். போதும் இறங்குங்கள்!" என்றான் ஐயாசாமி. எல்லோரும் இறங்கினர். பழங்களைப் பொறுக்கிக் குவித்தனர். பொன்னம்பலத்தை எழுப்பினர். அவன் எழுந்து பழங்களைப் பார்த்ததும் பதறினான்.

"என்னடா இது? பழங்களெல்லாம் இப்படி கடிக்கப்பட்டிருக்கிறதே!"

"எல்லாம் அணில் கடித்த பழங்கள்! உனக்கு நன்றாக வியாபாரம் நடக்கும்! நல்ல லாபம் கிடைக்கும்!" என்றான் ஐயாசாமி.

"எப்படிடா லாபம் கிடைக்கும்? இவ்வளவு பழங்களையுமா அணில் கடித்திருக்கும்? யார் வாங்குவார்கள்? நான் எப்படிப் பிழைப்பேன்?" அவன் கண்ணீர் விடாமல் அழுதான்.

"இந்தத் தோப்பில் நிறைய அணில்கள் இருக்கின்றன. முதலில் அவைகளைப் பிடித்து ஒழித்துவிடுங்கள்!" என்றான் குப்பன்.

"அவைகளைப் பிடிப்பது எப்போது? நான் பிழைப்பது எப்போது? இந்தத் தோப்பை நான் குத்தகை எடுத்தது இன்றோடு போதும்! எனக்கு எந்தத் தோப்பும் வேண்டாம்" என்று கூறிக்கொண்டு நாட்டாண்மைக்காரர் வீட்டை நோக்கி ஓடினான் பொன்னம்பலம்.



தாத்தா வள்ளியப்பர் மீண்டும் பெருமுயற்கி செய்தார். கொய்யாத் தோப்புக்கு வேறு ஒரு புதிய குத்தகைக்காரரை ஏற்பாடு செய்தார். தாத்தாவின் வருத்தத்தை ஐயாசாமி துளியும் உணரவில்லை. மற்றவர்களை வம்புக்கு இழுக்கின்ற பழக்கம் வளர்ந்து கொண்டிருந்ததே தவிர குறையவில்லை!

ஆண்டுக்கு ஒருமுறை ஊரில் கூத்து நடக்கும். கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறவில்லை. இந்த முறை எப்படியும் நடத்திவிட வேண்டும் என்று சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். ஐயாசாமி அந்த வழியே போய்க் கொண்டிருந்தான்.

கூத்து நடத்தப் போவதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததால் சிறுவர்கள் சூழ்ந்து நின்றனர். குப்பனும் சொக்கனும் கூட அங்கே இருந்தனர். அவர்களைக் கண்டதும் ஐயாசாமியும் அங்கே போய் நின்றான்.

“துரியோதனன் கூத்தில் இவனையும் சேர்த்துக் கொள்ளலாமா?” என்று கூத்தைக் கற்றுத்தரும் ஆசிரியர் ஐயாசாமியைக் காட்டி மற்றவர்களிடம் கேட்டார்.

"கட்டுச் சோற்றிலே பெருச்சாளியை வைத்துக் கட்டிக்கொண்டு போன கதைதான்!" என்றார் ஒருவர். எல்லோரும் சிரித்தனர்.

"என்னைச் சேர்த்துக் கொண்டால் கூத்து நடக்காமலா போய்விடும்?" என்று கேட்டான் ஐயாசாமி.

"எதைச் சொன்னாலும் செய்யும் சேவகன் வேடம் உனக்குத் தருவோம்! விருப்பந்தானா?" என்று கேட்டார் கூத்து ஆசிரியர்.

"தாங்கள் விரும்பி எனக்குத் தரும்போது நான்விரும்பாமல் இருப்பேனா?"

"கூத்தில் மட்டும் நீ சேவகன் இல்லை; கூத்து நடப்பதற்கும் நீ சேவகன் போல ஓடித் திரிந்து வேலை செய்ய வேண்டும்! சரிதானா?" என்று கேட்டார் மற்றொருவர் அதற்கும் ஒப்பினான்.

"எந்தெந்தப் பாத்திரங்களுக்கு யார் யாரை நடிக்க வைப்பது?" என்று அவர்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்தனர். ஒரு பட்டியல் தயார் செய்தனர். அந்தப் பட்டியலில் உள்ள பெயர்களை ஐயாசாமியிடம் சொன்னார்கள். "அவர்களை நாளை மாலையில் பிள்ளையார் கோயில் வாசலில் வரச் சொல்வது உன் பொறுப்பு" என்றனர்.

"யார் யார் எந்தெந்தப் பாத்திரங்களில் நடிக்கப் போகின்றனர்?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டான். இப்போதே அவர்களிடம் போய்த் தெரிவித்து விடுவதாக ஓடினான். "இப்படி ஒரு சேவகன் நமக்கு இருக்க வேண்டியது மிகவும் அவசியம்" என்று அவர்கள் பேசிக் கொண்டனர். ஐயாசாமியின் பின்னால் குப்பனும் சொக்கனும் ஓடினார்கள்.

முதலில் கோவிந்த சாமியைத் தேடிப் போனுன் ஐயாசாமி. கோவிந்தசாமியை அவர்கள் துரியோதனனுக நடிக்கத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அந்த ஆள் வீட்டில் இல்லை.

"அவன் இப்போது கழனியில் இருப்பான்! நாம் அங்கே போய் அழைப்போமா?" என்று ஐயாசாமியைக் கேட்டான் சொக்கன்.

"நாம் ஏன்டா அவ்வளவு தூரம் போக வேண்டும்? எதிர் வீட்டில் இருக்கிற உலகநாதனை வரச் சொன்னுல் போகிறது!" என்று கூறிக் கொண்டே எதிர் வீட்டுக்குள் ஓடினுன். அந்த வீட்டுக்குள் நுழையவே பயந்து கொண்டு சொக்கனும் குப்பனும் வெளியே நின்றனர்.

ஒரு நிமிடத்தில் சொல்லி விட்டு வெளியே வந்து விட்டான் ஐயாசாமி. தருமன், கண்ணன், நகுலன், சகா தேவன் ஆகிய பாத்திரங்களில் நடிப்பவர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டான்.

சகுனியாக நடிக்கப் போகும் நாராயணசாமியைச் சென்று பார்த்தான். "எனக்கு உடல் நலமில்லை, கூத்தைக் கற்றுக் கொண்டு நடிக்க வழியில்லையே! என்ன செய்வேன்?" என்று வருந்தினுர். "வருந்த வேண்டாம்! நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று புறப்பட்டான் ஐயாசாமி. அவன் பின்னுலேயே ஓடினர் சொக்கனும் குப்பனும்.

வடிவேலு திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந் தார். அவரிடம் போய், "நீங்கள் சகுனியாக நடிக்க வேண்டும்! நாளை மாலை பிள்ளையார் கோயில் வாசலுக்கு

வந்தால் மற்ற விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்!'' என்றான்.

''என்னடா சொன்னாய்? என்று கோபத்துடன் பார்த்தார். அதற்குள் ஐயாசாமி அங்கிருந்து பறந்து விட்டான்.

மறுநாள் மாலை பிள்ளையார் கோயில் வாசலில் ஒரு கூட்டம் நடந்தது. கூத்து சொல்லித்தரும் ஆசிரியர், நடத்தப் போகும் கூத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நடிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர்.

உலகநாதன் மிகுந்த கோபத்தோடு வந்து நின்றான். ''என்னைத் துரியோதனனாக நடிக்கும்படிச் சொல்லி அனுப்பினீர்களாமே! இந்த ஊரில் ஒழுங்காக இருக்க விருப்பமில்லையா?'' அவன் கர்ச்சனையைக் கேட்டதும் கூத்து ஆசிரியர் எழுந்து வணங்கி பதில் சொன்னார்.

''பையன் உங்களைத் தவறாக அழைத்துவிட்டான். நீங்கள் ஊரில் பெரியவர். உங்களை அழைப்போமா? நேர்ந்த பிழையை மன்னியுங்கள்!''

பின்னாலேயே வடிவேலு வந்தார். ''என்னய்யா வாத்தியாரே, சகுனியாக நடிக்க என்னையா அழைத்தீர்கள்?''

நடுங்கி விட்டார் கூத்து ஆசிரியர். அவர்கள் இருவரையும் சமாதானம் செய்து அனுப்புவதற்குள் படாத பாடு பட்டு விட்டார். ஐயாசாமியை அழைத்துக் காதை முறுக்கினார். அவன் சொன்னான் :

''கோவிந்தசாமி வீட்டில் இல்லை. அதனால் உலகநாதனை அழைத்தேன், அவர் தம்பிகளுக்கெல்லாம் பங்கு தராமல் ஏமாற்றி ஊரை விட்டே ஓட்டி விட்டாரே!

அவரை விட்டால், துரியோதனன் வேடத்திற்குத் தகுந்த ஆள் நம் ஊரில் வேறு யார் இருக்கிறார்கள்?" எல்லோரும் அவன் பதிலைக் கேட்டுக் குலுங்க குலுங்கச் சிரித்தனர்.

"வடிவேலுவை வேறு அழைக்க வேண்டுமா?" என்று கூத்து ஆசிரியர் தலையில் அடித்துக் கொண்டார்.

"வடிவேலு, எத்தனையோ குடும்பங்களைக் கெடுத்து நல்ல காரியம் செய்திருப்பதாக ஊரில் பேசிக் கொள்கிறார்களே! அதனால்தான் சகுனி மாமா வேடத்திற்கு நன்றாக நடிப்பார் என்று துணிந்து போய் அழைத்தேன்."

"சரி! இத்துடன் உன் துணிச்சலை மூட்டைகட்டி ஒரு மூலையில் வை! பீமனாக நடிப்பவர் எங்கே? போய்ப் பார்த்து வா!" என்றார் கூத்து ஆசிரியர். ஓடினான் ஐயாசாமி, பீமனாக நடிக்கும் துரையைத் தேடிப் போகும் போது முத்தநாதன் எதிரே வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் ஐயாசாமி பாடத் தொடங்கினான்.

"பீமன் வருகிறார் — எங்கள்
மாமன் வருகிறார்!
கூட்டம் சேருங்கடா! — சுற்றி
ஆட்டம் ஆடுங்கடா!"

முக்கநாதனுக்குக் கோபம் புயல் போல வந்தது. ஐயாசாமியைத் தாவிப் பிடிக்க ஓடினான். ஐயாசாமி ஓட, முத்தநாதன் ஓட அந்தக் கண்கொள்ளாக் காட்சியை ஊரே பார்த்துக் கொண்டிருந்தது.

ஒரு பெரிய மரத்தின் உச்சியில் ஏறிப்போய் உட்கார்ந்து கொண்டான் ஐயாசாமி. ஆத்திரத்துடன்

திரும்பிப் போனான் முத்தநாதன். சிறிது நேரம் கழித்துக் கீழே இறங்கி வந்தான் ஐயாசாமி. அவனிடம் சொக்கன் வந்து ஒரு விண்ணப்பம் கொடுத்தான்.

"குளத்தில் நிறைய தாமரைப் பூக்கள் உள்ளன. ஒரு பூவை என் தங்கைக்காகப் பறித்துக் கொடடா!"

"எல்லாப் பூவையும் பறித்துக் கொடுக்கிறேன் வாடா! ஓடினான் குளத்தை நோக்கி, சிறுவர் சிறுமியர்



அவன் பின்னால் ஓடினர். குளத்திலே பாய்ந்து குதித்தான்.

பூவைப் பறித்துக் கரையை நோக்கி எறிந்தான். எறிந்த பூக்களை எடுப்பதில் சிறுவர்களுக்குள் போட்டி. முத்தநாதன் மகன் கீரனும் அந்தக் கூட்டத்தில் இருந்தான். மற்றவர்கள் எடுப்பதற்குள் ஓடிப்போய் அவன் எடுத்து விடுவான்.

கீரன் தன் தங்கையின் கையில் நிறைய பூக்களை எடுத்துக் கொடுத்திருந்தான். சொக்கன் தன் தங்கையின் கையில் ஒன்று கூட எடுத்துத் தர முடியவில்லை. ஐயாசாமி பார்த்தான். "டேய் கீரா, பாதி பூக்களை சொக்கனிடம் கொடுடா!" என்று கத்தினான்.

கீரன் மறுத்தான். தண்ணீரைக் கிழித்துக் கொண்டு ஐயாசாமி கரைக்கு வந்தான். கீரனின் தங்கையின் கையில் உள்ள பூக்களைப் பாய்ந்து சென்று பிடுங்கினான். அத்தனையும் ஒரு வினாடியில் குளத்தில் தூக்கி எறிந்து விட்டான்.

மீண்டும் அவைகளை எடுக்க கீரன் குளத்தில் குதித்தான். காலில் ஒரு கொடி ஒன்று சிக்கிக் கொண்டது. மேலே நீந்த முடியாமல் "ஐயா! அம்மா!" என்று அலறினான்.

இதைப் பார்த்த ஒருவர் ஓடிவந்தார். குளத்தில் குதித்துப் பாய்ந்து சென்று அவனைக் கரைக்கு இழுத்து வந்தார். அவன் தந்தை முத்தநாதனுக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ என்று பயந்து சிறுவர்கள் ஓடிவிட்டனர்.



ஐயாசாமியால்தான் தன் மகன் குளத்தில் விழ நேர்ந்தது என்பதை அறிந்த போது முத்தநாதன் துடித் தான். பல்லைக் கடித்தான்.

கூத்து நடத்துவதற்கு ஒத்திகை நடந்து கொண் டிருந்தது. ஒவ்வொரு நாள் ஒத்திகையின் போதும் ஐயாசாமியின் குறும்புகளைப் பார்த்துக் குலுங்கக் குலுங்கச் சிரிப்பார்கள். சிலர் அவனைப் பார்வையால் எரிப்பார்கள்.

ஒரு நாளைக்கு ஒருவரை அழவைப்பான். மறுநாள் அவரையே சிரிக்க வைப்பான். "ஒத்திகையின் போதே இவன் இப்படி விளையாடுகிருனே! கூத்து நடக்கும் போது என்ன செய்வானே?" என்றும் சிலர் பேசிக் கொண்டார்கள்.

அந்த நாளும் வந்து விட்டது. தெருவெல்லாம் அலங்கரித்தார்கள். நான்கு தெருக்கள் கூடும் மையமான இடத்தில் கூத்து ஆரம்பமானது. உள்ளூர் மக்கள் மட்டு மல்ல. பக்கத்து ஊரிலிருந்து வந்தும் மக்கள் கூடி விட்டனர்.

அ—4

கூத்து நன்ருக நடந்து கொண்டிருந்தது. இடையிலே ஒரு காட்சி. துரியோதனன் பாண்டவர்களை ஒழிப்பதற்குத் தன் தம்பி துச்சாதனனேடும் கன்னனேடும் ஆலோசனை நடத்துகிருன். அப்போது துரியோதனன் தன் மாமன் சகுனியை அழைத்து வரும்படி சேவகனுக்கு கட்டளையிடுகிருன்.

"அரசே, இதோ அழைத்து வருகிறேன்!" என்று கூறிக்கொண்டு பின்னுல் ஓடினுன். சேவகன் ஐயாசாமி சில நிமிடங்கள் கழித்துப் பாண்டவர்களை அழைத்து வந்தான்! ஒரு வினுடி துரியோதனனுக்கு ஒன்றும் விளங்கவில்லை!

ஏன்? கூட்டத்தினருக்கே விளங்கவில்லை. "நான் அழைத்து வரச் சொன்னது யார்? நீ அழைத்து வந்தது யார்?" என்று உறுமினுன் துரியோதனன்.

"நீங்கள் சகுனியை அழைத்து வரச் சொன்னீர்கள்!" நான் போய்ப் பார்த்தேன். சகுனியைக் காணவில்லை. அவர் சோடா குடிக்கப் போய்விட்டாராம்! நீங்கள் பாண்டவர்களை ஒழிக்கத்தானே அவரை அழைத்துவரச் சொன்னீர்கள். அதனுல் நான் பாண்டவர்களையே அழைத்து வந்து விட்டேன். இப்போதே ஒழித்து விடுங்கள்!"

எல்லோரும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

"என்னடா உளறுகிருய்?" துரியோதனனுக்கு மெய்யாகவே கோபம் வந்துவிட்டது.

"நீங்கள் பாண்டவர்களை இப்போதே ஒழித்துவிட்டால் கூத்தும் உடனே முடிந்துவிடும். நானும் உடனே தூங்கப் போய்விடுவேன்." மக்கள் மேலும் சிரித்தனர்.

"நீ இப்போதே தூங்கப்போடா!" என்று ஐயாசாமியின் கழுத்தைப் பிடித்துத் தள்ளினன் துரியோதனன். கூத்து ஆசிரியர் ஓடிவந்து சமாதானம் செய்து வைத்தார்.

ஒருநாள் தாத்தா வள்ளியப்பரைத் தேடி நடேசன் வந்தான். "ஐயா, உங்கள் பேரன் செய்த கொடுமையைக் கேட்டீர்களா?"

"என்ன நடந்தது?" என்று பதறினர் தாத்தா.

"நேற்று மாலை வீட்டுக்கு வந்து சேர வேண்டிய எருமை வரவில்லை! உங்கள் பேரன் அதன் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு சென்ருனும்! பார்த்தவர்கள் சொன்னர்கள்..."

"வருந்தாதீர்கள். என் பேரன் வந்ததும் விசாரிக்கிறேன்."

"என் மகள் திருமணத்திற்காக அந்த எருமையை ஆயிரம் ரூபாய்க்கு விற்க ஏற்பாடு செய்திருந்தேன். வாங்குகிறவன் வந்து பார்த்து விட்டுப் போய்விட்டான். மாட்டை எங்கே தேடுவேன்? எப்படி என் மகளுக்குத் திருமணம் செய்வேன்?..." புலம்பினன் நடேசன்.

"எப்படியும் மாட்டைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்கிறேன்! ஐயாசாமி வந்ததும் முதல் வேலையாகக் கேட்கிறேன்!"

"ஐயா உங்கள் காலில் விழுந்து கேட்கிறேன்! என் பெண் வாழ்வது உங்கள் கையில்தான் இருக்கிறது. அவளையும் ஒரு பேத்தியாக எண்ணி உதவி செய்யுங்கள். அவன் விழிகளில் கண்ணீர் வழிந்தது. தாத்தா மிகவும்

மனம் வருந்தினுர். ஆறுதலாகப் பேசி அனுப்பி வைத்தார்.

பேரன் இப்படியெல்லாம் ஊராரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிருனே என்று தாத்தா எண்ணி எண்ணிக் கலங்கினுர். அவன் திருந்துகின்ற நாள் எந்த நாளோ என்று கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார்.

ஐயாசாமி வந்தான். தாத்தா அமைதியாக இருந்தார். வழக்கமாக ஏதேனும் கேள்வி கேட்பார். இன்று பேச்சையே காணும்! அவர் முகம் மிகவும் வாடியிருந்தது! சிறிது நேரம் கழிந்தது.

“தாத்தா ஏன் இன்று பேசாமல் இருக்கிறீர்கள்?” புரியாமல் கேட்டான்.

“நீ ஆடுகிற விளையாட்டு எல்லை மீறிப் போகிறது. நான் என்ன பேசுவது என்றே தோன்றவில்லை!” பெருமூச்சுவிட்டார் தாத்தா.

“நான் இப்போது என்ன செய்து விட்டேன்?” அலட்சியமாகக் கேட்டான்.

“நடேசன் மாடு காணவில்லையாமே! அந்த எருமையை எங்கே ஓட்டினுய்?” தாத்தா கோபமாகக் கேட்டார்.

“நான் ஊருக்குள்தான் ஓட்டினேன். எல்லா மாடுகளுக்கும் பின்னுல் போனது. எங்கே போனதோ? யார் பிடித்துக் கொண்டார்களோ?” ஐயாசாமி ஆத்திரமாகப் பேசினுன்.

“மகள் திருமணத்திற்காக மாட்டை விற்க முடிவு செய்தாராம் நடேசன்! மாட்டைக் காணுமல் இங்கே வந்து அழுதுவிட்டுப் போனுர்! தெரியுமா?”

''எது நடந்தாலும் நான்தானு?'' என்று கோபமாகக் கத்திக்கொண்டே எதிரே இருந்த காந்தி சிலையைக் கீழே தள்ளினுன். சிலை உடைந்தது. அதைப் பார்த்த தாத்தா பதறினுர்.

நெடுங்காலமாக உயிர் போலப் பாதுகாத்து வந்த சிலை உடைந்து சிதறியதைப் பொறுக்க முடியவில்லை அவரால்.



''ஏன்டா என்ன காரியம் செய்தாய்டா? இதற்கா உன்னை இத்தனை காலம் வளர்த்தேன்? திருந்துவாய் திருந்துவாய் என்று அன்பு காட்டியதெல்லாம் இதற்குத் தானு?...'' தாத்தாவால் பேச முடியவில்லை. அவர் விம்மி விம்மி அழுதார். சிலை மட்டும் உடையவில்லை; அவர் சிந்தையே உடைந்துவிட்டது.



காந்தியடிகளின் மீது தாத்தாவுக்கு அளவு கடந்த பற்று. அவர் நாட்டுக்குச் செய்த தொண்டினை ஐயாசாமியிடம் பலமுறை கூறியிருக்கிறார். ஊரில் தெரியாதவர்களுக்கெல்லாம் காந்தியின் பெருமைகளைச் சொல்வது அவர் வழக்கம்.

காந்தியின் கொள்கை வழியிலே நடப்பவர் தாத்தா. அதனால்தான் ஐயாசாமியின் செயல்களை அன்பு வழியிலே மாற்ற முயன்றார். அவனோ காந்தி சிலையையே உடைக்கத் துணிந்து விட்டான்! இனிமேலா திருந்துவான்? அந்த நம்பிக்கையே போய்விட்டது அவருக்கு.

இரவு வள்ளியப்பர் ஒன்றும் சாப்பிடவில்லை. பேரனோடு ஏதும் பேசவில்லை. குமுறுகின்ற நெஞ்சோடு படுத்துக் கொண்டார். பொழுது விடிந்தது. ஐயாசாமி கொய்யாத் தோப்புக்குச் சென்றுவிட்டான்.

மீண்டும் பகல் வந்தான். தாத்தா நேற்று இரவு படுத்தது போலவே படுத்துக் கொண்டிருந்தார். உள்ளே எட்டிப் பார்த்தான். அடுப்பு மூட்டவே இல்லை. ஒன்றும் சமைக்கவே இல்லை. அங்கே சொக்கனின் தாய் வந்தாள்.

"தாத்தா ஏன் படுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? உடம்பு சரியில்லையா? என்னை அழைத்தால் கஞ்சி காய்ச்சித் தரமாட்டேனா?" என்று அன்புடன் கேட்டாள்.

தாத்தா ஒன்றும் பேசவில்லை. சொக்கனின் தாய் மீண்டும் கேட்டாள். "நான் கொஞ்சம் கஞ்சி கொண்டு வரட்டுமா?..."

"இதுவரையில் நான் சாப்பிட்டதெல்லாம் போதும். இனிமேல் நான் எதற்காகச் சாப்பிட வேண்டும்? எப்போது ஐயாசாமி உண்மை பேசுகிறானோ அப்போது சாப்பிடுவதைப் பற்றிப் பார்க்கலாம்" என்றார் தாத்தா.

"என்னடா ஐயாசாமி, தாத்தாவைப் பட்டினி போட்டு விட்டாயா?"

"நடேசன் எருமையை நான் எங்கேயோ ஓட்டி விட்டேன் என்று என்மேல் கோபப்படுகிறார்; நான் ஊருக்குள் தான் ஓட்டினேன்!" என்று உறுதியாகச் சொன்னான்.

"நான் உயிரோடு இருப்பது அவனுக்குப் பிடிக்க வில்லை. அதனால்தான் பிடிவாதமாகப் பொய்யே பேசிக் கொண்டிருக்கிறான்!" என்றார் தாத்தா.

"நீங்கள் சாப்பிடுங்கள்; அவன் உண்மையைச் சொல்லி விடுவான்!"

"உண்மை சொல்லுகிறவரை என் உண்ணாவிரதம் நிற்காது! நான் இறந்த பிறகாவது அவன் மற்றவர் களுக்குத் தொல்லை தருவதை நிறுத்தட்டும்!" தாத்தா திடமாகப் பேசினார். சொக்கனின் தாய் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்; இருவரும் ஒன்றுபடவில்லை.

இரண்டாவது நாளும் தாத்தா உண்ணா விரதத்தைத் தொடர்ந்தார். ஐயாசாமி தன்னை நம்பும்படி எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவர் அவன் சொல்லை அணுவளவும் நம்பவே இல்லை.

இரண்டாவது நாள் மாலை தாத்தா மிகவும் சோர்வாக இருந்தார். அவர் வாடிய முகத்தைக் கண்டு ஐயாசாமி மிகவும் வருந்தினான். எப்போதும் எதற்கும் கலங்காத அவன் முகம் கலங்கியிருப்பதை அவன் நண்பர்கள் பார்த்தார்கள்.

"என்டா ஐயாசாமி, எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பாய்! இன்று சிரிப்பை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய்?" சொக்கனும் தங்கமும் கேட்டனர். நடந்ததை யெல்லாம் சொன்னான் ஐயாசாமி.

அதற்குள் குப்பன் வந்தான். "இரண்டு நாளாக நானும் நடேசன் மாட்டைத் தேடுகிறேன்! சுற்றி உள்ள ஊர்களிலெல்லாம் கூடக் கேட்டு வந்துவிட்டேன். மாட்டைக் காணவில்லையே" என்றான் குப்பன் வருத்தமுடன்.

என்றுமே இல்லாத துன்பம் ஐயாசாமி முகத்தில் குடிகொண்டிருந்தது. அவன் நண்பர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக மாட்டைத் தேடி ஓடினர். எங்கெங்கோ சென்றனர். யார் யாரையோ கேட்டனர். என்னென்னவோ முயற்சிகளைச் செய்து பார்த்தனர். எவ்வித பயனும் இல்லை.

மூன்றாவது நாள் தாத்தா உண்ணாவிரதம் இருந்தார். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவி விட்டது. பலர்

தாத்தாவை வந்து பார்த்தார்கள். உண்ணு விரதத்தை நிறுத்தும்படி ஊர் பெரியவர்கள் எவ்வளவோ கேட்டுப் பார்த்தார்கள். தாத்தா பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

"அடே ஐயாசாமி, நீ உண்மையைச் சொல்லிவிடு; இல்லா விட்டால் உன் தாத்தா இப்படியே இருந்து



இறந்து விடுவார்!" என்று அவனை எல்லோரும் எச்சரித்தனர். ஐயாசாமி 'ஓ' என்று அழ ஆரம்பித்துவிட்டான். அவன் அழுகையைக் கூட யாரும் நம்பவில்லை.

ஊரிலே ஒவ்வொரு தெருவாகப் போய் அழுதான். "நடேசன் மாட்டை எங்கேனும் பார்த்தீர்களா? எவரேனும் பார்த்தீர்களா? யாராவது மாட்டைப் பிடித்து வைத்திருந்தால் சொல்லி விடுங்கள்!"

கதறிக் கதறி அழுதான். நேற்றுவரை சிரித்தவன் இன்று அழுவதைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள். "ஐயோ! என் தாத்தாவைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்ற மாட்டீர்களா? காப்பாற்ற மாட்டீர்களா?"

ஐயாசாமியின் அழுகுரல் இரும்பு நெஞ்சையும் கரைக்கக் கூடியதாக இருந்தது. ஊரில் உள்ள பெரியவர்களிடமெல்லாம் போய் அழுதான். அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை! எல்லோரும் அவ ன்நிலைக்கு இரக்கப்பட்டனர்.

ஊரெல்லாம் சுற்றி அழுதான். எந்தப் பயனும் காணுது சோர்வுடன் வீடு திரும்பினுன். தாத்தாவின் நிலை எப்படியிருக்கிறதோ என்று பயந்து கொண்டே உள்ளே நுழைந்தான்.

தாத்தா படுத்துக் கொண்டிருந்தார். அவரால் பேசவும் முடியவில்லை. பக்கத்தில் சொக்கனின் தாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"ஏன்டா ஐயாசாமி, இப்படிப்பட்ட தாத்தா உனக்குக் கிடைப்பாரா?" சொக்கனின் தாய் கேட்டாள். ஒன்றும் பதில் சொல்லாமல் ஐயாசாமி அழுது கொண்டு நின்ருன்.

குப்பன் ஓடிவந்தான். ஐயாசாமியை வெளியே அழைத்தான். இவன் காதருகில் ஏதோ சொன்னுன். உடனே வேகமாக ஓடினுன் ஐயாசாமி. நேராக முத்த நாதனுடைய வீட்டின் முன் போய் நின்ருன். இவன் வரு

வதைப் பார்த்த முத்தநாதன் உள்ளே போய் ஒளிந்து கொண்டான்.

முத்தநாதனின் மனைவி வெளியே வந்தாள். அவளைக் கண்டதும் ஐயாசாமி அவள் காலில் விழுந்து வணங்கினான். "நான் செய்த குற்றங்களையெல்லாம் மன்னியுங்கள்! என் தாத்தாவின் உயிரைக் காப்பாற்றுங்கள்!" இன்னும் என்னென்னவோ சொல்லிக் கதறி அழுதான்!

"நான் என்ன செய்வேன்? கணவர் வீட்டில் இல்லை. நடேசன் மாட்டை யார் பிடித்து வைத்திருக்கிறார்களோ? மாடுகளை விரட்டியடித்து விளையாடுவதில் நீ தானே வீரன்!" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

ஐயாசாமி துடித்தான். முத்தநாதனை ஊரெங்கும் தேடிப் பார்த்தான். காணவில்லை. மிகுந்த வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

படுத்துக்கொண்டிருந்த தாத்தாவின் பக்கத்தில் முத்தநாதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். தாத்தாவின் முகத்தில் மலர்ச்சி தெரிநதது. ஐயாசாமியைப் பர்த்துப புன்முறுவல் செய்தார். ஐயாசாமிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"ஏன்டா! நேற்றுவரை நீ எல்லோரையும் அழ வைத்துச் சிரித்துக் கொண்டிருந்தாய்! இன்று நீ அழுததைப் பார்த்து எல்லோரும் சிரித்தனர். நீ ஏறித் திரிந்த நடராசன் மாட்டை யாரும் காணாமல் நர்ன் ஒளித்து வைத்தேன். மற்றவர் துன்பம் இப்போது புரிந்ததா?" என்று கேட்டான் முத்தநாதன்.

“துன்பம் என்றால் என்ன என்று நான் இப்போது நன்றாக உணர்ந்து கொண்டேன். என்னால் இனிமேல் யாருக்கும் தொல்லை இருக்காது! நான் யாரையும் அழ வைக்கமாட்டேன் என்றான் ஐயாசாமி!”

“என் மனைவியின் காலில் வந்து விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டதால்தான் நான் இங்கே வந்தேன். உண்மையைத் தாத்தாவிடம் சொன்னேன். அவரும் உண்ணாவிரதத்தை நிறுத்தினார்” என்றான் மூத்தநாதன். ஐயாசாமி அவனுக்கு மிகவும் நன்றி தெரிவித்தான்.

தாத்தா உண்மையை உணர்ந்து உண்ணாவிரதத்தை நிறுத்தியதில் ஐயாசாமிக்கு அளவற்ற மகிழ்ச்சி. பேரன் இனி திருந்தி விடுவான் என்ற நம்பிக்கை தாத்தாவுக்கு வந்துவிட்டது.

முற்றும்

பொன்னம்மா ஒரு புதுமைப் பெண்

தங்கப் பதக்கம் பரிசு பெற்ற சிறுவர் நாடகம். குடகுமலை குள்ளச்சாமியை உங்களுக்குத் தெரியுமா? வேடிக்கையான மனிதர். நீங்கள் அவசியம் அவரைச் சந்திக்க வேண்டும்.

மருத்துவரின் மகள் பல்லவி. அவள் பேச்சைக் கேட்டவர்கள் நோய் அதிகமாய் விட்டது என்பார்கள். பொன்னம்மாவோ, அவள் பேச்சைக் கேட்ட பிறகு தன் வயிற்று வலியே போய்விட்டது என்கிறாள். இருவருக்கும் நட்பு வளர வேண்டும். ஆனால் பகைதான் வளர்ந்தது. ஏன்?

பிறைநிலா பள்ளியில் வாயைத் திறப்பதே இல்லை! வீட்டிலும் திறப்பதில்லை! அவள் வீட்டு வேலைக்காரன் வாழைப்பழம் கொடுத்தான். அப்போதும் அவள் வாயைத் திறக்கவில்லை. பொன்னம்மா அவள் காதில் ஏதோ சொல்லுகிறாள். உடனே வாயைத் திறந்தாள். பொன்னம்மா என்ன சொன்னாள்?

அறிவாளி எப்படி மருந்து குடிப்பான்? பொன்னம்மாவைக் கேட்டால்தான் தெரியும்! பொன்னம்மாவைப் போல ஒரு பெண்ணை நாங்கள் பார்த்ததே இல்லை என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். அப்படி அவள் என்ன தான் புதுமை பேசினாள்?

படித்துப் பாருங்கள்! பொன்னம்மா ஒரு புதுமைப் பெண்!

விலை ரூ. 2-25

முயன்றால் முன்னேறலாம்

'முயன்றால் முன்னேறலாம்' என்னும் தலைப்பே கவர்ச்சியானது. அதைவிடக் கதை சொல்லும் பாங்கு—ஓட்டம்—நடை எல்லாம் விறுவிறுப்பாக இருக்கின்றன. ஏழைச் சிறுவன் பாண்டியன் வாழ்வில் முன்னேறுவதற்குப் பட்ட பாடுகளை ஆசிரியர் சித்திரிக்கும் அழகு ஒரு திரைப் படக் காட்சியைக் காண்பது போன்ற இன்பத்தை அளிக் கிறது.

புளித்துப் போன பழங் கதைகளையே படித்துப் படித்துச் சலித்துக் கிடக்கும் சிறுவர் சிறுமியர்க்கு இந்தக் கதை நூல் இன்பத்தென்றல் வீசும் ஒரு பூஞ்சோலை. இந்தப் புத்தகத்தைத் தொட்டவர் ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்.

கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள் சென்னை வானொலியிலும் கவியரங்குகளிலும் கவிதை மழை மொழியும் ஒரு காளமேகம். அவர் குழந்தை இலக்கியத் துறையிலும் அடியெடுத்து வைத்துக் குழந்தைகளின் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற நல்ல இலக்கியங்களைப் படைக்க முன்வந்தது குழந்தைகள் பெற்ற பெரும் பேறு என்றே கூறுவேன்.

புலவர்
தணிகை உலகநாதன்
13 - 2 - 74

தலைவர்
சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவை

விலை ரூ. 4 - 00

சந்திர மண்டலத்தில் மந்திரவாதி

சிறுவன் அரசுமணி சந்திர மண்டலத்திற்குப் போக விரும்பினன். அவனுக்கு ஒரு மந்திரவாதி உதவி செய்தார். உலகையே மாற்றும் வல்லமை படைத்த மந்திரக் கோலை அவனிடம் கொடுத்தார். அதன் உதவியால் சந்திர மண்டலம் சென்ருன்.

அங்கே புதிய உலகத்தைப் படைக்கிருன். புதிய மனிதர்களைப் படைக்கிருன். அவர்கள் புது வாழ்வு வாழ்கிருர்கள். எல்லாம் மந்திரக் கோல் செய்த வேலை. ஒவ்வொருவர் வீட்டிற்கும் சிறுவன் விருந்தினராகச் செல்கிருன். அவர்கள் வாழும் வாழ்க்கையைக் கண்டு வியப்படைகிருன்.

வீதியிலே ஒரு கிழவி கையிலே முட்டையை வைத்துக் கொண்டு, "இது யாருடைய முட்டை? இது யாருடைய முட்டை?" என்று ஒவ்வொருவரையும் கேட்டுக் கொண்டிருக்கிருள்!

ஒரு பெரியவர், "பணம் வைத்திருக்கிறேன்; யாருக்காவது வேண்டுமா? பணம வைத்திருக்கிறேன்; யாருக்காவது வேண்டுமா?" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிருர்!

சிங்கமும் எருமையும் அருகருகே படுத்துக் கொண்டிருந்தன. புலியும் மானும் விளையாடிக் கொண்டிருந்தன. கழுகும் கிளியும் ஒரே கிளையில் அமர்ந்து கொண்டிருந்தன.

சந்திர மண்டலத்தில் எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி. எங்கு பார்த்தாலும் இன்பம். அரசுமணி இந்தக் காட்சி

களையெல்லாம் கண்டு மகிழத் தன் நண்பன் வேம்பு இல்லையே என்று வருந்துகிறான். மந்திரக் கோலின் உதவியால் பூமியிலிருந்து வேம்புவைச் சந்திர மண்டலத்திற்கு வரவழைக்கிறான்.

வேம்பு பூமியிலே பெரிய அதிகாரியின் மகன். எந்த வேற்றுமையும் இல்லாமல் ஒரே சீராக சந்திர மண்டலத்தில் மக்கள் வாழ்வது கண்டு வெறுப்படைகிறான். அங்கே உள்ள பிள்ளைகளோடு சண்டையிடுகிறான் அவர்கள் பொருளைத் திருடுகிறான். மகிழ்ச்சியோடு இருந்த அரசுமணி வேம்புவால் மிகவும் மனம் வருந்துகிறான்.

இன்ப மயமாக விளங்கும் சந்திர மண்டலத்தை மண்ணுலகம் போல் வேற்றுமைகள் நிறைந்ததாக மந்திரக் கோலால் மாற்ற வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறான். அரசுமணி அதை விரும்பவில்லை. சமயம் பார்த்து வேம்பு மந்திரக்கோலைத் திருடிக் கொண்டு ஓடுகிறான்.

வேம்பு என்ன செய்தான்? சந்திர மண்டலம் மாறியதா? அரசுமணி எந்த முடிவுக்கு வந்தான்?

படித்துப் பாருங்கள்! 'சந்திர மண்டலத்தில் மந்திர வாதி'.

விலை ரூ. 3-50

கிடைக்குமிடம்:

வசந்தா பதிப்பகம், ஆலந்தூர், சென்னை-16

பாரி நிலையம், பிராட்வே, சென்னை-1.

இக்கின் பாதம்ஸ் மவுண்ட்ரோடு, சென்னை-2.

புலவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன், பி.லிட்.
எழுதியவை

நாவல்

நினைத்தால் இனிப்பவனே	6-50

கவிதைத் தொகுப்பு

இமயம் எங்கள் காலடியில்	8-50
காலக்கிளி	4-00
சித்திரப் பந்தல்	4-50
மோகனரங்கன் கவிதைகள்	4-00

கவிதை நாடகங்கள்

கயமையைக் களைவோம்	8-00
யாருக்குப் பொங்கல்	4-25
புது மனிதன்	4-00
வைர மூக்குத்தி	4-00
மனிதனே புனிதனாவாய்	5-00

காப்பியம்

கனவுப் பூக்கள்	4-25

சிறுவர் கவிதை

பள்ளிப் பறவைகள்	2-25

சிறுவர் நாடகங்கள்

பொய்யே நீ போய்விடு	2-75
வெற்றி எங்கள் கைகளிலே	2-50
நாங்கள் நல்லவர்கள்	2-25
பொன்னம்மா ஒரு புதுமைப் பெண் (ஏ.வி.எம். தங்கப் பதக்கம் பரிசு பெற்றது)	2-25

சிறுவர் கதைகள்

ஆண்டி அரசாண்ட கதை	5-00
அன்பு செய்வதே அழகு	6-50
ஒழுக்கம் எங்கள் உயிர்	3-50
முயன்றால் முன்னேறலாம்	3-50
சந்திர மண்டலத்தில் மந்திரவாதி	3-50
கதை சொல்லத் தெரியாத பாட்டி	2-50
கொய்யாத்தோப்பு ஐயாசாமி	3-25
அடிமைப் பூதங்கள்	1-75
குப்பை மேட்டுப் பூனைக்குட்டி	1-25